பொன்னி



PONNI

25 5 51

4

பொன்னி
பொருளடக்கம்


மலர் 5 | மே 25, 1951 | இதழ் 6

திருவள்ளுவர் ஆண்டு 1982 வைகாசித் திங்கள் 11ம் நாள்

துக்கப்படுகிறேன்

......தேசீயப் போராட்டத்தின்போது பல ஆண்டுகளாகச் சேவை செய்துவந்த, நான் மிகவும் விரும்பும் ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவதை நினைக்கும்போது எனக்கு மிகுந்த வருத்தமுண்டாகிறது. நான் கொண்டிருக்கும் கருத்தை முன்னிட்டும், நீங்களும் காங்கிரஸில் பதவி வகிப்பவர்களும் அனுஷ்டிக்கும் கொள்கையை முன்னிட்டும் ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவதே மிகவும் சரியான, கௌரவமான வழியாகும் என்ற முடிவிற்கு வந்துவிட்டேன். இந்தக் கடிதத்தின் மூலம் நான் ராஜினமாச் செய்கிறேன். மிகவும் ஆழ்ந்த துக்கத்துடனும் வருத்தத்துடனும் அவ்வாறு செய்கிறேன். தேசத்தை எதிர்நோக்கியுள்ள கஷ்டமான நிலைமையில், நாம் பல பிரச்னைகளை எதிர்நோக்கியிருக்கும் சமயத்தில் பிற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடி நாம் ஒற்றுமையடைய முடியவில்லை என்று நினைக்கும்போது நமது தேச ஒழுக்கத்திற்கு இழுக்காகுமோ என்று கருதி நான் துக்கப்படுகிறேன்......

[காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்து, டாண்டனுக்குத் தோழர் கிருபளானி எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.]



குழாய் ரிப்பேர்
கைத்தறி நெசவாளர்
நூல் விநியோகம்
போதுமான நூல்
கைத்தொழில் அமைச்சர்

கிருபளானி வெளியேற்றம்

காங்கிரஸை விட்டுக் கிருபளானி விலகிவிட்டார்; காங்கிரஸை வளர்த்த முக்கியமானவர்கள் சிலருள்ளே கிருபளானியும் ஒருவர். உத்தமர் காந்தியாரின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்து அதன் படி வழுவாது நடந்துவரும் உண்மைக் காந்திய வாதிகளில் ஒருவர் கிருபளானி. காங்கிரஸ் கட்சியின் தலைவராகச் சில ஆண்டுகள் பதவி வகித்தவர் கிருபளானி. கடைசியாக நடந்த காங்கிரஸ் தலைவர் தேர்தலில் டாண்டனுக்கும் கிருபளானிக்கும் வாக்குகள் ஏறக்குறையச் சரிசமமாக இருந்தன என்பதையும் நண்பர்கள் அறிவர். சிறிய மெஜாரிட்டி காரணமாகவே டாண்டன் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் அறிவோர் யாரும் கிருபளானி காங்கிரஸைவிட்டு வெளியேறி யிருக்கும் செய்தியைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.



காங்கிரஸ் கட்சிக்கே ஒரு பேரிடியாக இந்தச் செய்தி வந்திருக்கிறது என்பதை அரசியல் போக்குணர்வோர் அனைவரும் திண்ணமாகக் கூறமுடியும். கிருபளானிக்குப் போதுமான செல்வாக்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருக்கிறது என்பதைக் கட்சித் தலைவர் தேர்தல் நன்கு காட்டியிருக்கிறது. ஏறக்குறையப் பாதி வாக்குகளை அவர் அத்தேர்தலில் பெற்றிருக்கிறார் என்னும்போது, காங்கிரஸ் கட்சியில் சரிபாதி பலம் அவரைச் சார்ந்திருக்கிறது என்று கூடத் துணிந்து கூறலாம். மேலும் முதலமைச்சர் நேரு, கிருபளானியைத்தான் தலைவர் பதவிக்கு ஆதரித்தார் என்பதும் வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்ததே. இத்தகைய சூழ்நிலையில் கிருபளானி வெளியேற்றம் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பெரும் சோதனையாகவே முடியலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

கிருபளானி தான் விலகுவதற்குக் காரணங்கள் கூறும்போது, கட்சிக் கொள்கைகளில் தமக்கொன்றும் வேறுபாடு இல்லையென்றும், செயற்படுத்தும் முறையில் தமக்கும், அதிகாரத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்கட்கும் வேறுபாடு இருக்கிறதென்றும் குறிப்

பிட்டிருக்கிறார். கிருபளானி காங்கிரஸ் தலைவராக இருந்து விலகிய போது கூறிய காரணமும் இதுதான். தான் கட்சியின் தலைவராக இருந்தும், தனக்கு யாதொரு சம்பந்தமுமில்லாமலேயே காங்கிரஸ் அரசாங்கம் நடைபெறுகிறதென்றும், தான் ஒரு பொம்மையாகவே கருதப்படுவதாகவும் அப்போது அவர் குற்றம்சாட்டியதுண்டு. இக்குற்றச்சாட்டை ஆளும் காங்கிரஸ்காரர்கள் ஏற்றுக்கொள்ளவோ அல்லது திருத்திக் கொள்ளவோ முனையவே இல்லை. பற்றாக் குறைக்குக் கடைசித் தேர்தலின் பிறகு, டாண்டன் தலைவராக வந்தாரல்லவா? அவர் தமக்குக் காரியதரிசிகள் ஏற்படுத்திக்கொண்டார். அக்காரியதரிசிகளோ, காங்கிரஸ் கட்சி முழுமைக்கும் பிரதிநிதிகளாகப் பணியாற்றாமல் காங்கிரஸிலுள்ள ஒரு சாராருக்கே பிரதிநிதிகளாகப் பணியாற்றினர்; ஆங்காங்கு நடைபெறும் மாகாணக் கமிட்டி, ஜில்லா கமிட்டித் தேர்தல்களிலெல்லாம் தங்கள் சார்பினர் வெற்றியடையவே தங்கள் பதவியைப் பயன்படுத்தினர் — இந்தக் குற்றச்சாட்டும் சேர்ந்து கொள்ளவே கிருபளானி விலகுவது இன்றியமையாததாகிவிட்டது.

காங்கிரஸ் பெரிய கட்சி. ஒரு உபகண்டம் முழுவதும் பரவியிருப்பது. எனவே கட்சிக்குள் பல குழுவினர், பல எண்ணமுள்ளவர்கள் இருப்பது இயற்கை. மேலும் காங்கிரஸ் ஆளும் கட்சி. ஆளும் கட்சியில் பதவிக்கு வரப் போட்டா போட்டி இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாதது. காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்தல், காங்கிரஸ் கமிட்டித் தலைமைக்குத் தேர்தல், ஜில்லாக் கமிட்டி, தாலுகாக் கமிட்டி, மாகாணக் கமிட்டி இப்படி எத்தனையோ கமிட்டிகட்குத் தேர்தல் காங்கிரஸ் கட்சியில் நடைபெற வேண்டியிருக்கிறது. இந்தத் தேர்தல்கள் வரும்போதெல்லாம் போட்டி ஏற்படுகிறது. இரண்டு பேர் ஒரு பதவிக்குப் போட்டியிடும்போது ஒருவர் வெற்றியடைவார்; மற்றொருவர் தோல்வியடைவார். இருவரும் வெற்றியடைவது முடியாத காரியம். ஆகவே ஒவ்வொரு கட்டத்திலும், காங்கிரஸ் பஞ்சாயத்து மெம்பர் தேர்தல் முதல் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பதவித் தேர்தல்வரை தோல்வியடைபவர்கள் என்ற ஒரு சாரார் இருக்கத்தான் செய்வர். இவர்கள் அதிருப்தி அடைகிறார்கள். தங்கள் தோல்விக்கு 'அது காரணம், இது காரணம்' என்று கற்பித்துக் கொள்ளுகிறார்கள். தங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு ஒரு 'முன்னணி' வைத்துக் கொண்டு, வெற்றியடைந்து அதிகாரத்திலிருப்பவர்களை எதிர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பு முன்னணி, ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு நகரிலும், ஜில்லா அளவிலும், மாகாண அளவிலும், அகில இந்திய அளவிலும் அமைக்கப்பட்டு இயங்குகிறது. இம்முன்னணிகள் தேர்தலில் தோல்வியடைவதால் உருவாகின்றனவா, கருத்து வேற்றுமையால் உருவாகின்றனவா என்று சரியாக வரையறுத்துக்

கூற முடியாது. இவ்வகையில்தான் கிருபளானி தம் கூட்டுத் தோழர்களின் அதிருப்திக்கு ஒரு உருவம் கொடுத்து 'ஜனநாயக முன்னணி'யைக் காங்கிரஸுக்குள்ளேயே அமைத்திருந்தார். ஆந்திராவில் தோழர் பிரகாசம், கேரளாவில் தோழர் கேளப்பன், வங்காளத்தில், பீஹாரில், உத்திரப் பிரதேசத்தில் இவ்வாறு எல்லா மாகாணங்களிலுமே அதிருப்தியடைந்த காங்கிரஸ்காரர்களெல்லாம் ஜனநாயக முன்னணி அமைக்கத் தொடங்கினார்கள். இம்முயற்சி நாளுக்கு நாள் வலுப்படவே கிருபளானியோடு நேரு முதலிய தலைவர்கள் சமாதானம் பேசினார்கள்; எத்தனையோ தடவை கூடிக் கூடிப் பேசினார்கள்; கடிதப் போக்குவரத்துகளை நடத்திப் பார்த்தார்கள். ஒன்றும் பயன் ஏற்படவில்லை. ஆனால் காங்கிரஸுக்குள்ளிருந்த ஜனநாயக முன்னணி கலைக்கப்பட்டு, வெளியே காங்கிரஸுக்கு எதிராகப் பலமான கட்சி ஒன்று நிறுவ முயற்சிகள் தொடங்கிவிட்டன.

இம்முயற்சிக்கு அடிப்படையாகவே கிருபளானி காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கிறார். தபால் தந்தி அமைச்சர் கித்வாய் விலகுவதும் விரைவில் நிகழக்கூடும். ஆங்காங்கு பிரபலமான பலர் காங்கிரஸை விட்டு விலகும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சென்னையில்கூடப் பிரகாசம் சிலரைச் சேர்த்துப் பிரஜா கட்சி அமைத்திருக்கிறார். தமிழ் நாட்டிலும் கிருபளானியோடு சேரப் பல காங்கிரஸ்காரர்கள் 'துடித்து'க்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. பாட்னாவில் ஒரு மாநாடு நடைபெறுமென்றும் அங்குதான் புதுக் கட்சி உருவாகுமென்றும் கிருபளானி கூறுகிறார். அதற்கிடையில் பிளவு ஏற்படாமல் தடுக்கவும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டிப் பிரச்னையைப் பரிசீலனை செய்யவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அம்முயற்சி வெற்றி பெறுவதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல; வீண் சல சலப்பாகவே முடியும்.

காங்கிரஸில் ஏற்படும் இந்தப் பிளவு நாட்டு மக்களுக்கு என்ன பயனளிக்கும் என்று கவனிப்பது நம் கடமை. கிருபளானியை முக்கிய நபராக வைத்தே எதிர்க்கட்சி உருவாக இருக்கிறது. கிருபளானி நேர்மையானவர்; கூறி வரும் கொள்கைப்படி நடக்கும் உறுதியுள்ளவர். ஆனால் கிருபளானி காங்கிரஸ் கொள்கைகளில் தமக்கு யாதொரு வேறுபாடும் இல்லையென்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறாரே! அவரை விடுத்து மற்றவர்களைப் பார்த்தால், தனித் தனிக் கருத்துள்ளவர்கள், பதவி பெறாததால் ஏமாற்றமடைந்தோர், மீண்டும் மீண்டும் முயன்றும் பதவிக்கு வர முடியாத

வர்கள், எப்படியாவது, எங்கேயிருந்தாவது பதவி பெற்றேயாக வேண்டுமென்ற கருத்துள்ளோர், உள்ளபடியே கிருபளானியைப் போன்ற உத்தமர்கள் — இவ்வாறுதான் அவர்களைப் பிரித்துக் காட்ட முடிகிறது. இவர்களெல்லாம் சேர்ந்து அமைக்கப்போகும் கட்சிக்கோ, காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளே குறிக்கோளாக இருக்குமாம். அமைப்பாளர்களும் பொறுப்பாளர்களும் முன்னாள் காங்கிரஸ் வீரர்கள்தாம். இந்நிலையில் புதுக் கட்சி என்ன சாதிக்க முடியும்? நாட்டுக்கு அவர்கள் என்ன உருப்படியான நன்மையைத் தந்துவிட முடியும்?

ஆனால் ஒன்று. காங்கிரஸின்மீது ஏற்பட்டு வரும் அதிருப்தி, தேர்தலில் காங்கிரஸைப் பெரிதும் பாதிக்கும். புதுக் கட்சியினரை இந்த அதிருப்தி அவ்வளவு பாதிக்காது. புதிய பெயரில் காங்கிரஸ் காரர்கள் மறுபடியும் பதவிக்கு வர ஒரு சந்தர்ப்பம்தான் கிருபளானியின் புதுக் கட்சி. இதைத் தவிர வேறு விளக்கத்தை நம்மால் கூற முடியவில்லை.



வாழ்க மணமக்கள் !



கோனாபட்டு மெ. மு. மு. அ. முத்தையா செட்டியார் அவர்களின் புதல்வரும், நம் "பொன்னி" நண்பர்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளரும், இளங்கவிஞருமான தோழர் மு. அண்ணாமலை — வள்ளியம்மை திருமணம் 11—5—51 அன்று ஆத்தங்குடியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டும் பொருட்டு, அண்ணாமலைநகர் வித்துவான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நண்பர்கள் வித்துவான் வெள்ளைவாரணர், முருகு சுப்பிரமணியன், வித்துவான் மெ. சுந்தரம் முதலியோர் அண்ணாமலை தம்பதிகளுக்கு நல்வாழ்த்துக் கூறினர். நண்பர்களும், உறவினர்களும் மணமக்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கினர். புது வாழ்க்கை தொடங்கியிருக்கும் நண்பர் அண்ணாமலைக்குப் "பொன்னி" தன் இனிய வாழ்த்துரைகளை வழங்கி மகிழ்கிறது.

காலமும் கருத்தும்

அரசியல் திருத்தம்

'செய்வன திருந்தச் செய்' என்பது பழமொழி. இப்பழமொழி இன்னும் எத்தனை நூற்றாண்டு கழித்தும் புதுமொழியாகவே காட்சிதரும் போலும்! சென்னை அரசினரின் வகுப்புரிமைச் சட்டம் செல்லுபடியாகாதென்று சுப்ரீம் கோர்ட் அறிவித்த பிறகு, சென்னை அமைச்சர்கள் அரசியலைத் திருத்த வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக டில்லி சென்றார்கள். முதலமைச்சர் நேருவிடம் வகுப்புரிமைச் சட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதன் பயனாக அரசியல் திட்டத்தில் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் இந்திய சர்க்கார். நேரு, சென்னை அரசினரின் வகுப்புரிமைச் சட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாரென்பது அவர் பார்லிமெண்டில் பேசியிருக்கும் விதத்திலிருந்து நன்கு புரிகிறது. சட்ட அமைச்சர் அம்பேத்காரும் வகுப்புரிமையை ஆதரித்துத் தக்க ஆதாரங்களோடு பேசியிருக்கிறார். ஆனால் வரும் திருத்தமோ, போதுமானதல்ல. அது சென்னை வகுப்புரிமைச் சட்டத்தை அமுல் நடத்த இடந்தரும் அளவுக்கு விரிந்து கொடுக்கக் கூடியதல்ல என்று சட்டம் தெரிந்த நிபுணர்கள் கூறுகிறார்கள். திருத்த மசோதா பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனையில் இருக்கிறது. பொறுக்குக் கமிட்டிக்குத் தக்க ஆலோசனைகள் நல்கச் சென்னை அரசினர் சில நிபுணர்களை அனுப்பி வைத்தால் எவ்வளவு பயனிருக்கும்! நேரு சர்க்கார் திருத்தம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தம் செம்மையாக அமையும் வகை பார்க்கும் பொறுப்பு சென்னை சர்க்காருடையதல்லவா? 'செய்வன திருந்தச் செய்'

என்று அவர்கட்கு நாம் கூற வும் வேண்டுமா?

நெசவாளர் சத்தியாக்கிரகம்

சென்னையில் நெசவாளர் சத்தியாக்கிரகம் நாளுக்கு நாள் வலுத்துவருகிறது. நாள்தோறும் நகரின் பல பகுதிகளிலும் சத்தியாக்கிரகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமைச்சர் வீட்டு முன்பும், சர்க்கார் காரியாலயம் முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. கைதாகும் நபர்களின் தொகையும் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. ஆனால், அரசினரோ கண்ணிருந்தும் காணாராய்க், காதிருந்தும் கேளாராய்த் தம் போக்கில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றனர். போதமான நூல் வழங்குவது பெரும் கஷ்டமல்ல. சென்னை நூல் உற்பத்தியே இங்குள்ள நெசவாளர்கட்குப் போதும். டில்லி சர்க்காருடன் வாதிட்டுப் போதுமான நூலைப் பெற முடியவில்லை, இந்த அமைச்சர்களால். வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பட்டினியையும் அதிருப்தியையம் வளரவிடுவதுதான் இந்த அசட்டையான போக்கின் பலனாக முடியும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

அமெரிக்கா பேரம்

அப்பாடா! கோதுமையைக் கடனாகத் தர அமெரிக்கா சம்மதித்திருக்கிறது. செனட் சபையில்தான் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இன்னும் தீர்மானம் முற்றும் அமுலுக்கு வர வேண்டிய கட்டம் தள்ளிவைக்கப்பட்டுத்தான் இருக்கிறது. இந்த அரைகுறை நிறைவேற்றத்திலும், கோதுமைக்குப் பதில் மோனஸைட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் அமெரிக்கர்கள். மோனஸைட் அணுகுண்டு உற்பத்திக்கு மிகத் தேவை. இந்திய சர்க்கார் அதனை யாருக்கும் அனுப்புவதில்லையென முன்கூட்டியே முடிவு செய்திருக்கிறார்கள். அமெரிக்கா தரப்போகும் கோதுமைக்காக அந்த முடிவை மாற்றிக் கொள்வார்களா என்பது சந்தேகமே! தரவிருப்பமில்லாதவன் செய்யும் சாகசங்களைத்தான் அமெரிக்கா நடத்தும் பேரத்தில் நாம் காண முடிகிறது! இரக்கப்பட்டு, பட்டினி கிடக்கும் மக்களுக்கு உதவ முன்வரும் ஈகைப் பண்பை நாம் துளிகூட அவர்கள் பேச்சில் காண முடியவில்லை! வேடிக்கைதான்!

தமிழ் விருந்து

"தமிழ்த்தும்பி"

5. என்னடி துன்பம்!

கதிர்ச் செல்வன் மலை வாயில் விழுந்துகொண்டிருந்தான். அவனுடைய பொற்கதிர்கள் வானத்தின் தெளிந்த நீல வண்ணத்தைச் சிதைத்தன. பகலோனின் ஒளியை மறைக்க முற்பட்ட முகில் கூட்டம் அவன் கதிர்கள் பட்டு ஒளி பெற்றது. மாலைபொளி மெல்ல மெல்ல மங்கி வந்தது. இருள் தன் சிறகுகளை மெல்ல விரிக்கலாயிற்று. தூரத்தே இடையர் பொழியும் குழல் இசையும், பசுக் குழாம் கழுத்திலே மோதுண்ட மணி முழக்கமும் கேட்டன.

மாடி வீட்டு வாசலிலே பொறுமை இழந்து காத்திருந்தாள் சுடர்க் கொடி. அமைதியின்மையும் ஆர்வத் துடிப்பும் அவள் வதனத்தில் ஒருமித்தன. வீட்டு வாசற்படியை விட்டு அகன்ற தெருவுக்குள் வந்ததும் அவள் தாய் அவளைப் பெயர் சொல்லி அழைத்தது அவளுக்குக் கேட்டது. மிரள மிரள விழித்த அவளுடைய பேசும் விழிகள் கேள்விக் குறியைப் போட்டன. "சுடர்க் கொடி! மாலை மங்கி இருள் தொடங்கி விட்டது. இந்த வேளையில் எங்கேயம்மா போகிறாய்?"

"அம்மா! நம் பசு மாடு காலையில் வயல் மேயச் சென்றது— இன்னும் திரும்பவில்லை. இதற்குள் அது வீடு சேர்ந்திருக்க வேண்டாமா? அதைத் தேடிப் பிடிக்கப்போகிறேன்."

"பெண்ணே! பசு ஒரு நொடிக்குள் வந்துவிடும். ஒருநாளைப் போலவே மற்றொரு நாளும் குறித்த காலத்தில் திரும்ப அதனால் முடியுமா? அது வந்துவிடும். நீ போய் விளக்கேற்று."

"சரி, அம்மா."

விளக்கை ஏற்றப் போனாள் சுடர்க்கொடி. வயலிலிருந்து திரும்பிவிட்ட பசுமாடு அவளைக் கண்டதும் "அம்மா" என்று அன்போடு அழைத்தது. விளக்கேற்றிவிட்டு ஓடிவந்து மாட்டைத் தன் மென் கரங்களால் தடவிக் கொடுத்தாள் சுடர்க்கொடி.

○

"சுடர்க்கொடி! சுடர்க்கொடி! எங்கேயடி காணோம்? எங்கே போய்விட்டாய்?"

"அம்மா! வீட்டில் சமையலுக்கு வேண்டிய தேங்காய் ஆய்விட்டிருக்கிறது. அதை வாங்கி வரக் கடைத் தெருவுக்குப் போகிறேன்."

"இவ்வளவு இருட்டுக்கு மேலா? அதுவும் தனியாகவா? வேண்டாமம்மா. என் தோழி பூங்கோதையை அனுப்புகிறேன்."

"அவளும் வழித் துணைக்கு வரட்டுமே, அம்மா!"

"வேண்டாமடி, பொன்னே! நீ போய்ச் சமையலைக் கவனி."

○

"சுடர்க்கொடி! சுடர்க்கொடி!"

"ஏனம்மா?"

"எங்கு போகப்போகிறாய்? ஏன் ஆத்திரப்படுவது போலக் காணப்படுகிறாய்?"

"அம்மா! அப்பாவுடன் யாரோ விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். விருந்துக்கு வாழையிலை வேண்டாமா? கோடி வீட்டுக் கலைச்செல்வியிடம் போய்க் கேட்டு வரப்போகிறேன்."

"வேண்டாம் கண்ணே! நான் போய் நம் வாழைக் கொல்லையைப் பார்த்து வருகிறேன்."

"அங்கு நல்ல பெரிய இலைகள் இல்லை அம்மா! நான் பார்த்தேன்."

"சரி! பக்கத்து வீட்டு மரகதத்திடம் வாங்கிக்கொள்ளலாம். இதற்காக நீ மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கக் கோடி வீடு வரைக்கும் ஓடவேண்டாம்!"

சுடர்க்கொடிக்குப் "பொசுக்" கென்று ஆகிவிட்டது. எதையும் தானே செய்து முடிக்கத் தன் அன்னை அனுமதிப்பதில்லை கொஞ்ச நாளாக; இவ்வாறு தாயார் நடந்துகொண்ட வகையை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. தாய்மீது கோபம் கோபமாக வந்தது. ஆனாலும் பெற்றெடுத்த தாயல்லவா?

○

"சுடர்க்கொடி! ஏனம்மா ஒரு மாதிரி வருத்தமாகக் காண்கிறாய்? கூந்தலைக் கோதவில்லை? கண்களுக்கு மை தீட்டவில்லை? ஏன் இப்படிச் சோர்ந்திருக்கிறாய்?"

"தோழி! எந்த ஒரு அலுவலையும் நானே செய்து முடிக்க என் தாயார் விடுவதில்லை. எதிலும் அவள் தலையிட்டு என் திருப்தியையும் நிம்மதியையும் கலைத்து விடுகிறாள்."

"என்னம்மா, இப்படிச் சொல்கிறாய்?"

"ஆம். தோழி நான் வீட்டை விட்டு வெளியே போய்க் குறைந்தது ஒரு வாரமாவது இருக்கும். அதிகாலையில் நீரெடுத்து வர ஆற்றங்கரை போவது, சமையலுக்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான் வாங்கக் கடைத்தெரு போவது, பேச்சு இன்பம் பெறத் தோழிகள் வீடு போவது எல்லாம் ஒரு வாரமாக நின்றுவிட்டன. ஏதோ சிறையில் அடைபட்ட குற்றவாளி போல அமைதியை இழந்து—கவலையின்றிச் சிட்டுப் போலப் பறப்பது மறைந்து—கிடக்கிறேன். தாயின் கண்காணிப்பும் கண்டிப்பும் என்னைக் காவல் செய்பவை போலக் காட்சியளிக்கின்றன. எப்படி நான் இன்பமாக இருப்பேன்?"

"நான் ஐயப்பட்டது சரியாகப் போய்விட்டது!"

"என்னடியம்மா புதிர் போடுகிறாய்?"

"ஆம். அம்மா! ஒரு வாரத்துக்கு முன் நீங்களும் நானும் பால் நிலவில் பாதி இரவில் வீட்டு மேல்மாடியில் உரையாடிக் கொண்டிருந்தோம் அல்லவா?"

"ஆம்."

"அப்போது ஒரு சிறிய காகம் நம் வீட்டுக் கழிநீரைத் துழவிக் கொண்டிருந்ததல்லவா?"

சுடர்க்கொடியின் கண் முன்னே ஒரு காட்சி விரிந்தது. அன்று முழுநிலவு. குளிர்ச்சியோடு அமைதி கூடிய இரவு. இளம் உள்ளங்களின் கற்பனையைத் தட்டியெழுப்பும் நிலவு. சுடர்க்கொடியும், அவள் தோழியும் கணக்கற்ற எண்ணங்கள் கொண்ட முடிவற்ற பேச்சில் மூழ்கியிருந்தனர். இரவின் அமைதியைக் கலைக்க எங்கிருந்தோ ஒரு காகம் வந்தது. காக்கைக்கு இரவில் கண் தெரியாது என்பார்கள். ஒருவேளை முழுமதியின் பால் நிலவு அதன் நினைவுக்குப் பகலாகத் தெரிந்ததோ, என்னவோ?

அது வந்த திக்கைக்கொண்டு பார்த்தால், அது கொந்தளிக்கும் அலைகடல் பெருமுழக்கமிடும் நெய்தல் நிலத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும்! கடற்கரையிலே பரதவர்களும், வலைஞர்களும் வசிப்பர். அவர்கள் வீட்டு முன் கூடங்களில் மீன் இறைச்சியும், சிறிய தெருக்களில் தின்று மீதமான இறைச்சித் துண்டுகளும் சிதறிக் கிடக்கும். ஆகாயத்திலே வட்டமிட்டுப் பசியால் கரையும் அக்காகத்துக்கு அங்கே பசியார உணவு கிடைக்கும்.

ஆனால் கழுத்தைச் சுற்றிச் சாம்பல் நிறம் படர்ந்த அக்காகம் கிடைத்ததை உண்ணவில்லை. மாறாக அந்த நெய்தல் நிலத்தை விட்டே வந்துவிட்டது. தோழி குறித்த அந்தநாள் இரவில் தன் வீட்டுக் கழிநீரைக் கலக்கிக் கொண்டிருந்தது அக்காகம். குளிர்ந்த கழிநீரிலே வளர்ந்திருந்த ஆண் யானையின் பெரிய காதுகள் போன்ற பசிய இலைகளைக் கலக்கி அது இரையைத் தேடிக்கொண்டிருந்தது. அதே சமயம் 'கடகட'வெனத் தேர்ச் சக்கரம் உருளும் ஓசை கேட்டது. ஒரு தேர் தன் வீட்டு எதிரிலே வந்து நின்றதும், சிறிது நேரம் தயங்கியதும், பிறகு திரும்பிச் சென்றதும் சுடர்க்கொடிக்கு இப்போது பார்ப்பதைப் போல அவ்வளவு ஆழமாக நினைவில் பதிந்திருந்தன.

சுடர்க்கொடி தோழியை நோக்கி, "ஆம்" என்றாள்.

"சுடர்க்கொடி! அந்தக் காகம் ஏனம்மா உங்கள் தெருப் பக்கம் வரவேண்டும்? அதற்குக் கடற்கரை அண்மையிலே வாழும் பரதவரிடம் உணவு கிடைக்காதா? அப்படித்தான் வந்தது. வேறு எங்காவது போய் இரை தேடக்கூடாதா? உங்கள் வீட்டுக் கழிநீரில்தான் அதன் அலகை விட்டுத் துழாவ வேண்டுமா?"

"தோழி! நான் உணராதபடி பேசுகிறாயே"


"அன்று தேரில் வந்து போனது யார் தெரியுமா? அம்மா!"

"அவர் செல்வாக்கு மிக்க குடும்பத்தில்தான் பிறந்திருக்க வேண்டும். அந்தக் களைவீசும் மதிமுகம், திரண்ட தோள்கள், பரந்த மார்பு......"

"அம்மா! அவர்தான் நெய்தல் நிலத் தலைவர்!"

"ஆ! அப்படியா?"

"ஆம். அம்மா! எப்படி அச் சிறு காக்கைக்கு அவர் நாட்டில் அமோகமாக அன்னம் கிடைக்குமோ, அப்படியே அவருக்கும் அவர் ஊரில் மணங்கொள்ள எத்தனையோ அழகிகள் அகப் படுவார்கள். ஆனால் அவர் தேர்



உன் வீட்டு வாயிலில் காத்துக் கிடந்தது."

"மகிழ்ச்சி, தோழி! நீ என்னைப் புரிந்துகொண்டிருக்கிறாய். என் காதலை என் அன்னையிடம் தெரிவித்தாயா?"

"இல்லையம்மா! தேர் வந்து போனதைத் தெருவில் வசிக்கும் யாரோ பார்த்திருக்கிறார்கள். உன் தாயிடம் சேதி சொல்லியிருப்பார்கள். அதனால் உன்மீது கட்டுக்காவல் அதிகரித்துவிட்டது."

"இளமைப் பருவத்தவரும் மடப்பமுடையவருமான அநேக பெண்கள் இவ்வூரிலே வசிக்கிறார்கள். அவர்களையெல்லாம் அவர்தம் தாய்மார் அலைப்பதில்லை. யாரோ பிற பெண்டிர் சொன்ன பேச்சைக்கேட்டு என் தாய் மட்டும் என்னை அலைக்கின்றாள். என்னடி என் துன்பம்!"

சுடர்க்கொடி நெய்தல் நிலத்தவரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தது உண்மை. அதனால் தான் தேர்வந்து தயங்கிச்சென்ற காட்சி அவளுக்கு மங்கா நினைவு ஆகிவிட்டது. தோழியும் தலைவியின் இந்த மனநிலையை நன்கு உணருகிறாள். காதல் வளர, தலைவன் தலைவியை இரவில் சந்திக்க முற்பட்டால் அந்த இரவுக் குறியினால் தங்கள் மூவருக்கும் ஏற்படவிருக்கும் அச்சத்தை—அதாவது ஊர் அலர் பேசப் போகும் அச்சத்தை—தலைவி தோழிக்கு எடுத்துரைக்கிறாள். இந்த உரையாடலைத் தோழி அடுத்த முறை தலைவனைச் சந்திக்கும்போது அவசியம் அவரிடம் எடுத்துச் சொல்வாள். பழியை யார்மீதும் சுமத்தாது தன்மீதே சுமத்திக்கொள்ளுகிறாள் தலைவி. அப்போது தலைவன் என்ன எண்ணுவான்? "நம்மால் அல்லவா அவளுக்கு அவதி? அவள் துயர் நீக்குவது நம் மாறாக்கடமையல்லவா? ஏன் அவளையும் நம்மையும் தோழியையும் அவதிக்குட்படுத்த வேண்டும்? காதலை வளர்க்க மணமே செய்துகொண்டால்..." என்று நினைப்பான். அதாவது தன்னை மணங்கொள்ளுக என்ற தன் கோரிக்கையைத் தலைவன் கடமையாக மாற்றிவிடுகிறாள் தலைவி. எவ்வளவு சாமர்த்தியமான பெண் அவள்!

> பெருங் கடற் கரையது
> சிறுவெண் காக்கை
> களிற்றுச் செவியன்ன
> பாசடை மயக்கிப்
> பனிக்கழி துழவும்
> பானாள் தனித்தோர்
> தேர் வந்து பெயர்ந்த
> தென்ப அதற்கொண்டு
> ஓரும் அலைக்கும்
> அன்னை பிறரும்
> பின்னுவிடு கதுப்பின்
> மின்னிழை மகளிர்
> இளையரும் மடவரும்
> உளரே
> அலையாத் தாயரொடு
> நற்பாலோரே.
>
> —குறுந்தொகை

[பாசடை—பசிய இலை; மயக்கி—கலக்கி, பானாள்—பாதி நாள்; ஓரும்—சிந்திக்கும்; பின்னுவிடு கதுப்பு — பின்னல் தொங்கும் கூந்தல்.]

நமது அரசியல் வானம்

அறிஞர் கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி.,

வறுமை, தொழிலில்லாத் திண்டாட்டம், பசி, பட்டினி, ஆடையில்லாத் துயரம், வீடில்லாத் துயரம் முதலிய எல்லாத் தொல்லைகளும் மக்கள் வாழ்வில் இன்று தலைவிரித்தாடுவது போல் என்றும் ஆடியதில்லை. இதற்குப் போர் காரணம் அல்ல. போர் முடிந்து நெடுநாளாகிவிட்டது. அன்னியர் ஆட்சி காரணம் என்று தென்னாட்டவர், திராவிட இயக்கத்தவர் கூறமுடியும். காங்கிரஸ் அகராதியை ஒத்துக்கொள்பவர் கூற முடியாது. ஏனெனில், பாரதத்தவப்புதல்வர்களே, காங்கிரஸ் வீராதி வீரர்களின் அரசாங்கமே இன்று ஆட்சிப் பொறுப்பேற்று ஆளுகிறது. இத்தீமைகளுக்கு உள்நாட்டுக் கலகம், கொள்ளை காரணமா? அதுவும் கூறமுடியாது. வடநாட்டிலாவது இந்து முஸ்லீம் படுகொலைக் களரிகள் உண்டு. தென்னாட்டில் அதுவும் இல்லை.

தென்னாட்டின் தீமைகளுக்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சியின் அட்டூழியம், காங்கிரஸ் பெயரால் ஆட்சியாளர் செய்யும், செய்யத் தூண்டும், ஆதரிக்கும் கள்ள வாணிகம், அநீதி ஆகியவைகளே என்பதை மாற்றுக் கட்சித் தோழர் மட்டுமல்லாமல் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களே ஒத்துக்கொள்வர். அது மட்டுமன்று; அரசியல் தெரிந்தவர்கள் யாவரும், ஜனநாயகத்தில் இம்மியளவு அக்கரையுள்ளவர்களும் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக நடந்து கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். காங்கிரஸ்காரரும் ஆட்சியாளர்களும் எதிர்க் கட்சிகளைத் தம் நாட்டிலேயே உள்ள கட்சிகளாக நடத்தவில்லை. பகைவர்களை விட மோசமாக நடத்துகின்றனர். மக்களையும் தம் நாட்டுக் குடிகளாக நடத்தவில்லை. பிரஜா உரிமை, மனித உரிமைகள் கூடக் காற்றுவாக்கில் விடப்படுகின்றன. எதிர்க் கட்சியினரின் சட்டபூர்வமான நடவடிக்கைகள், பிரசாரங்கள் ஆகியவற்றை எதிர்த்துத் தங்கள் கட்சியாளர்களின் குண்டர்களை ஒரு புறமும், போலீஸின் குண்டாந்தடியை மற்றொரு புறமும் கேள்வி முறையில்லாமல் பயன்படுத்தும் 'சட்டமில்லா நாஜி ஆட்சி' தான் இன்று நடைபெறுகிறது. எதிர்க்கட்சிக் கைதிகள் மட்டுமன்றி, வேண்டாத கைதிகளெல்லாம் கம்யூனிஸ்டுகள் என்று பெயர் சூட்டப்பட்டுச் சுட்டுத் தள்ளப்படுகின்றனர்.

கம்யூனிஸ்டுகள் என்றால் கூடச் சுட்டுத்தள்ள நியாயமில்லை என்பதைக் காங்கிரஸ் ஆட்சி கவனிக்கவில்லை — அவர்கள் முதலாளிகளையும் முதலாளி வல்லரசுகளாகிய பிரிட்டன், அமெரிக்காவின் துப்பாக்கிகளையும் நம்பியே வாழ்பவர்களாயிருப்பதனால்!

நாட்டில் நல்ல கட்சிகள் தோன்ற, பிரசாரம் செய்யவே இடமில்லை. தேர்தலுக்கு முன்னேற்பாடாகவே கம்யூனிஸ்டுக் கட்சிகள் போன்ற எதிர்க் கட்சிகள் தாக்குதலால் மிகவும் பலவீனப் படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் நேரத்தில் அவர்கள் மீது தடையுத்தரவை நீக்கியிருப்பதாகக் காட்டிக்கொள்வது கூட வெறும் தேர்தல் தந்திரமே. இது வெளிநாடுகளின் கண்களில் பொடி தூவுவதற்காகவே. தேர்தலில் காங்கிரஸ் தன் அரசாங்க வலு, ஆதிக்கம், செல்வாக்கு முழுவதையும் போலீஸ், படை வலுவையும் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கம் இதற்காகவே முதலாளிகளுக்கு ஆதரவு தந்திருப்பதுடன் அரசியல் செல்வாக்கையும், அவர்கள் செல்வாக்கையும் ஈடுபடுத்திக் கஸ்தூரிபா சங்கம், காந்திய சேவா சங்கம், கிராமப் புனருத்தாரண சங்கம், பிர்க்கா அபிவிருத்தி இலாகா முதலியவற்றைத் தயார் செய்து வைத்திருக்கிறது. இந்நிலையில் தேர்தல் ஒரு கேலிக் கூத்தாகவேதான் இருக்க முடியும்—நாஜிகள் தேர்தல்களை விட இத்தேர்தல் ஜனநாயகப் பண்பு குறைந்ததாகவே இருக்க முடியும்.

ஆயினும், ஜனநாயகத்தில், மக்கள் வாழ்வில் நம்பிக்கையும் பற்றும் உள்ள எவரும் இத்தேர்தலைப் புறக்கணிக்க முடியாது. காரணம் இத்தேர்தல் உலக மக்கள் கண்களில் பொடி தூவி, இன்றைய காங்கிரஸ் கட்சி நாட்டு மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கக் கட்சி என்ற பொய் எண்ணத்தை நிலையாக்கிவிடும். நாளை நாட்டு மக்கள் அடையவிருக்கும் தொல்லைகளை உலகம் அவர்களே வருவித்துக் கொண்ட தொல்லைகள் என்று கூறிப் பொறுப்பற்று இருந்துவிடும். உண்மையில் இந்நாட்டு மக்கள் பெரும்பாலார் அரசியல் விழிப்படையாதவர்கள் என்று வெளிநாட்டார் அறியவும் மாட்டார்கள் — அங்ஙனம் கூறுவதும் நமது தன்மதிப்புக்கு ஏற்றதல்ல.

ஆகவே, மக்களுக்கு நல்வழி காட்டும் அறிஞர், நிலையங்கள், நாட்டுப் பற்றும், மனிதப் பற்றும் உடைய நன்மக்கள்; இத்தகையோரால் ஆதரிக்கப்பெறும் முன்னணிக் கட்சிகள் ஆகியவற்றுக்கு இத்தேர்தலில் பெரும் பொறுப்பு உண்டு. இப்பொறுப்பை உணர்ந்த எந்த முன்னணிக் கட்சியும் இரண்டு தவறுகள் மூலம் காங்கிரஸ் நாஜி ஆட்சிக்கு மறைமுக ஆதரவு தந்துவிடாமல் பார்த்துக் கொள்ளக்கடமைப்பட்டவர்கள். ஒன்று அவர்கள் தனித்தனி நின்று

காங்கிரஸ் எதிர்ப்பைச் சித றடித்துவிடக் கூடாது. வருகிற தேர்தலில் ஒரே தலைமையான பிரச்சினை காங்கிரஸ் நாஜிச ஆட்சி வரவிடுவதா அதனை மாற்றுவதா என்பதே ஆயிருக்க வேண்டும். தனிக்கட்சிப் பிர சாரங்கள், தனிக்கட்சி நோக்கங் கள் இதற்கு உட்பட்டேயிருக்க வேண்டும். இத்தேர்தலில் தெரிந்தோ தெரியாமலோ காங் கிரஸ் எதிர்ப்பு முன்னணியில் பிளவு செய்வோர், அறிந்தோ அறியாமலோ காங்கிரஸ் நாஜிசத் துக்குச் செயலாதரவு தந்தவராய் விடுவார்கள். இப்பொறுப்பை முன்னணிக் கட்சி என்று கூறிக் கொள்ளும் கட்சிகள், கட்சித் தலைவர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் யாவரும் கருத் தில் கொள்ளவேண்டும். இவ் வகைப் பொறுப்புணர்வும், நல் லெண்ணமும் உடைய எல்லாக் கட்சிகளும் எல்லா மக்களும் சேர்ந்த ஒரு கூட்டு முன்னணி தேர்தலுக்கு முன் அமைவ துடன் அது தேர்தலுக்குப் பின்னுமிருந்து கட்சி நடுநிலை யுடன், ஆனால் கட்சிப் பொறுப் புடன் செயலாற்ற வேண்டும்.

நாஜிசத்துக்கு மறைமுக ஆத ரவு தந்துவிடக் கூடும் இரண் டாவது தவறுதல் இன்னும் முக் கியமானது. அது எந்தத் தனி மனிதரோ, தனிக்கட்சியோ, கட் சிகளோ தேர்தலில் அக்கரை யில்லாமலிருந்து விடுவதுதான். சென்றகாலப் போர் நாகரிக அழிவுக்கு வழிகோலக் கூடும் என்று அஞ்சி நேசநாடுகள் ஒன்றுபட்டன. இன்றோ இத் தேர்தல் ஜனநாயகத்துக்கு, சட்ட ஆட்சிக்கு, பிரஜா உரி மைக்குக் குழிதோண்ட விருக் கிறது. இதில் கலந்து கொள் ளாமல் இருப்பதானால், உலக மக் கள் முன் இன்றைய அரசாங் கத்தின் இயல்பை முன்பே அறி வித்து, இத்தேர்தலில் மக்களை ஈடுபடாமல் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அது எக்கட்சியாலும் நடத்தப் பெறவில்லை—உலகத்தின் கண் களில் நம் நாடும், நாட்டு நிலையும், நாட்டின் பல கட்சிகளும், நாக ரிகங்களும் இருட்டடிக்கப்பட் டுள்ளன. மக்களோ அரசியல் விழிப்படையவில்லை. இந்நிலையில் தேர்தலில் கலவாது ஒதுங்கி நிற் பதோ, கட்சி வேறுபாடு காட்டு வதோ தத்தம் கட்சிகளின் தற் கொலை மட்டுமல்ல; முன்னணிக் கட்சிகளின் பலக்குறைவுக்குக் காரணமாவது மட்டுமல்ல; நாட் டையே கொலைசெய்ய உடந்தை யாய் இருப்பதாகும்.

தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் காங்கிரசை எதிர்த்து மக்களிடையே எதிர்ப் புணர்ச்சியை வானளாவவளர்த்த கட்சிகள் திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக்கழக முமே. தமிழ்நாட்டுக்குள் ஓரள வும் வெளியே பேரளவிலும் கம்யூனிஸ்டுக் கட்சியும் இப் பணியைச் செய்துள்ளது. ஆனால் திராவிடக் கழகத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் பிரித்துக் கீரியும் பாம்பும்போல் ஒன்றை ஒன்று

பார்த்து முறைக்க வைத்துச் செயலற்றவையாக்கக் காங்கிரஸ் ஆட்சித் தலைமை கனவு காண்கிறது. இன்றுள்ள நிலையில் அக்கனவு ஓரளவு வெற்றி பெறுகிறதென்று கூடச் சொல்லலாம். அத்துடன் கம்யூனிஸ்டு என்ற பெயரையே புராணகால ராக்ஷஸர், அரக்கர் பெயராக்கி, அப்பெயர் கூறுபவர்களை அழிப்பதன் மூலம், அவர்கள் பக்கம் மற்ற முன்னணி இயக்கத்தார் நாடாமல் செய்யவும் அது சூழ்ச்சி செய்து வருகிறது. திராவிட இயக்கத்தார் தம்மை நேரடியாக நேசிக்காவிட்டாலும் கம்யூனிஸ்டுகளை வெறுத்தோ, திராவிட முதலாளிகள் மீதுள்ள அனுதாபத்தாலோ தம் பக்கம் கடைக்கண் பார்க்கலாம்; அல்லது தேர்தலில் கலக்காமலிருந்து தமக்கு உடந்தையாகலாம் என்று அவர்கள் இன்றும் கனவு காண்கின்றனர்.

திராவிட இயக்கத் தலைவர்களும், இயக்கத்தவர்களும் தேர்தல் விரும்பிகளும் அல்லர்; முதலாளித்துவத்தின் அடிதாங்கிகளும் அல்லர். பணக்காரர், படித்தவர், பட்டதாரிகள் ஆகியவர்கள் முன்பு தலைமை வகித்தும் அவர்கள் பணக்காரர், படித்தவர், பட்டதாரிகள் ஆகியவர்கள் வழிநிற்கவில்லை. தேர்தலை விடச் சமூகச் சீர்திருத்தத்திலேயே அவர்கள் அக்கரை மிகுதி உடையவர்கள். அத்துடன் அவர்கள் நாடுவது இந்திய அல்லது பாரத ஆட்சிக்கு உட்பட்ட அடிமையாகான ஆட்சியாகாது; திராவிட நாட்டு மக்கள் சுதந்திரத்தையும் ஆட்சியுரிமையையும் சுயநிர்ணய உரிமையையும் அடிப்படையாகக் கொண்ட சுதந்திர திராவிட நாட்டையே. ஆகவே திராவிடர்கள் தேர்தலை விலக்கி இருப்பதில் பொருள் உண்டு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் இப்பொருள் பயனில்லாப் பொருளே. உலகம் திராவிட நாட்டையோ, திராவிட நாகரிகத்தையோ, திராவிட இயக்கத்தையோ அறியாது. இந்தியாவிலேயே, திராவிட நாட்டுக்குள்ளேயே தமிழகத்துக்கு வெளியே அது இன்னும் நன்கு தெரியவராது. இந்நிலையில் திராவிட இயக்கப் பிரசார உரிமையையேனும் அளிக்கத் தக்க, திராவிடர் பசிதீர உணவும், உடையும், வீடும், நல்வாழ்வும் அளிக்கத்தக்க ஒரு அரசாங்கத்தை, ஒரு நாட்டை, ஒரு சட்ட ஆட்சியை அமைப்பதில் அவர்கள் அசட்டையாயிருந்துவிட முடியாது.

நாங்கள் தேர்தல் விரும்பிகள் அல்ல என்று கூறி முன்னணியில் கலக்காமலிருந்தால் பிற கட்சியினர் நம் உயர் கருத்துக்களை உண்மையில் மதிக்க முடியாமல் போய்விடக்கூடும். நாட்டின் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபடுவதைவிடத் திராவிட இயக்கத்தின் இரு பிளவுபட்ட கட்சிகளும் ஒன்றுபடுவது கடினம் என்பது இன்று நாமும் அறியாததன்று; பிறரும் அறியாததன்று. திராவிடர் எப்போதும், ஒருவரைஒருவர் எதிர்ப்பவர், அன்

னியரிடமே ஒட்டிக்கொள்ளும் இயல்புடையவர் என்ற நிலை இன்னும் எத்தனை நாள் இருக்கவிடுவது? தமிழ்நாட்டில் ஆரியரிடம் நாம் காணும் குறை கூட இது தவிர வேறென்ன? தமிழர், தென்னாட்டவர்களுடன் இணையாமல் எப்போதும் அவர்கள் அயலாருடன் இணைந்து கொள்கிறார்கள் என்றுதானே நாம் கூறுகிறோம். இதே தவறைத் திராவிட இயக்கங்களும் திராவிட இயக்கத்தவர்களும் செய்தால், "தவறு ஆரியர்களுடையதன்று; திராவிடர் தவறுதலே அவர்களைத் தலைமைவகித்து நடத்துபவர்கள் தவறு ஆய்விடுகிறது" என்றுதானே நாளடைவில் அறிவுடையோர் கருதக்கூடும்!

திராவிட முன்னேற்றக்கழகம் இன்று தமிழ்நாட்டில்—பெரும்பான்மை மக்கள் ஆதரவு கொண்டகட்சி. கேரள, கன்னட தெலுங்கு நாடுகளிலும் இது வளரத் தொடங்கியுள்ளது. எல்லா முன்னணி இயக்கங்களையும் ஒன்றுபடுத்த இக்கழகமும் அதன் ஒப்பற்ற தலைவர் அல்லது இயக்குநர் அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்களும் முயன்றால் அது முடியாத காரியமன்று. திராவிடத்தின் விபீஷண மரபை ஒழிக்க ஒரே வழி எல்லா முன்னணி இயக்கங்களையும் ஒன்றுபடுத்தி நாட்டுப்பற்று, மக்கட்பற்று அடிப்படையில் வழிகாட்டுவதுதான்.

திராவிட முன்னேற்றக்கழகம் இன்று ஒரு கட்சியாக மதிக்கப்படினும், உண்மையில் அது நாட்டு விடுதலை இயக்கத்தின் ஒரு முன்னணியேயாகும். வருங்காலத் திராவிட நாட்டில் ஆட்சிப் பொறுப்பு வந்தவுடன் அது கலைக்கப்பட்டுப் பல அரசியல் கட்சிகளாக இயங்கத்தக்க ஒரு முழுத்தேசிய அமைப்பேயாகும். ஆகவே கட்சி கடந்து செயலாற்ற இயக்கத்தவர்கள் திட்டமிடுவார்களாக.

பெண்கள் முன்னேற்றம்

மங்கை

2

நேரம் வளர்ந்து கொண்டிருந்தது; பார்வதி, சரசா பேச்சும் வளர்ந்து கொண்டிருந்தது!

"சத்துள்ள உணவுகளில் ஒன்று பால். பிள்ளைகளுக்கு மட்டுமின்றிப் பெரியவர்களுக்கும் பால் ஒரு முக்கிய உணவு. நான் என் குழந்தைகளுக்குக் காலையிலும் மாலையிலும் பால் கொடுத்து வருகிறேன்."

"நம் பக்கங்களில் எங்கும் நோஞ்சலான பசுக்களைத்தானே அதிகமாகப் பார்க்க முடிகிறது; அது ஏன்?"

"பசுக்களைத் தெய்வமென்று போற்றி அதற்குப் பொட்டிட்டுப் பூஜை செய்வதில்தானே நம் மக்கள் முனைகின்றனர்! பசு ஒரு பயனுள்ள உயிர். அதனுடைய நலத்தை நாமும் கவனிக்க வேண்டுமல்லவா? பாலை எல்லாம் கறந்தெடுத்துவிட்டுப் பசுவைப் பட்டினிபோட்டால், அது நாளொரு வண்ணமாக வளருமா? அல்லது தேயுமா? எல்லாம் தீனியில்தானடி இருக்கிறது! நல்ல தீனி போட்டால் பசு நன்றாக இருக்கும்!"

"பசுவினால் எத்தனை நன்மை! அதனுடைய பாலிலிருந்து தானே நெய், வெண்ணெய், தயிர் எல்லாம் கிடைக்கிறது! தயிரும் நமது முக்கிய உணவிலொன்று; இல்லையா? தயிரும் சத்துள்ள உணவுதானே?"

"அதிகம் வெண்ணெய் கடைந்தெடுக்கப்படாவிட்டால் தயிரும் சத்துள்ள ஆகாரம்தான்!"

"ஏண்டி பார்வதி, தயிரில் தீட்டில்லை என்கிறார்களே; உண்மைதானா?"

பார்வதி திடீரென்று சிரித்தாள். "அப்படிச் சொல்வது யாரடி?" என்று கேட்டாள்.

"ஏன், பார்ப்பனர்கள் சொல்வதில்லையா?"

"மற்ற உணவுகளில் தீட்டு இருக்கிறதாக்கும்? போடி பைத்தியம், விஷயம் உனக்குத் தெரியாது! அவர்கள் தங்களை 'உயர்ந்த ஜாதி' என்று சொல்லிக்கொள்கிறார்கள். மாமிசத்தை வெறுக்கிறார்கள். அவர்களின் முக்கிய உணவு தயிர். தயிர் இல்லாமல் அவர்களால் வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே எவரிடமும் தயிர் வாங்க அவர்கள் பின் வாங்கமாட்டார்கள். அதை 'மற்ற ஜாதிகள்' ஒரு மாதிரி எண்ணிக் கொள்ளக்கூடாதேயென்றுதான் தயிரில் 'தீட்டில்லை' என்கிறார்கள்!"

"உண்மைதான்! தூய்மைதான் நலம். அவ்வளவுதானே? தூய்மையாகச் சமைத்தால் தைரியமாக உண்ணலாம். நீட்டென்பதில் அர்த்தம் இல்லைதான்!"

"முட்டை நல்ல உணவு. உடம்பிற்கு ஊக்கத்தைக் கொடுக்கும். என் கணவர் என்றும் காலையில் இரண்டு முட்டைகள் சாப்பிடுவதுண்டு. முட்டையை அதிகமாக வேகவைத்துவிடக்கூடாது. தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கையில் முட்டையைப்போட்டு உடனே எடுத்துவிட வேண்டும். அரை வேக்காடாக இருக்க வேண்டும். அதுதான் நல்ல உணவு!"

"ஆனால் முட்டை விற்கிற விலையில் அதைக் காசுகொடுத்து வாங்க முடிகிறதாடி?"

"அப்படித்தான் எல்லாப் பெண்களும் சொல்கிறார்கள். அதைத் தடுக்க என்ன வழி தெரியுமா? கோழி வளர்க்க முயற்சிக்கவேண்டும். கோழி வளர்ப்பதனால் என்னென்ன பயன்?"

"அதுவும் நல்லதுதான்......! மரக்கறிகளிலும் நிறையச் சத்திருக்கிறதல்லவா? தக்காளி மிகவும் சத்துள்ள பழம். கீரைவகைகளை நல்ல உணவென்று சொல்கிறார்கள் விஞ்ஞானிகள்"

"ஆமாம்; கீரையைப் பல விதங்களில் சமைக்கலாம். கீரையோடு சிறிது தேங்காய்ப் பூவும், வெங்காயமும், பச்சை மிளகும் சேர்த்து எண்ணெயில் சமைத்தெடுத்தால் மிகவும் ருசியாயிருக்கும்!"

"நமது நாட்டில்தான் எத்தனை வகைக் கீரைகள்! கீரையின் அருமை தெரிந்தவர்களே தமிழ்மக்கள் தாம்! ஒரு சமயம் காந்தியடிகள் தமிழ் மக்களின் சமையலைக் குறித்து வெகு ஆச்சரியமாகப் புகழ்ந்து பேசினாராம். சாதாரணக் கீரையையே அவர்கள் 'எவ்வளவு அழகாகச் சமைக்கிறார்களென்று அவர் வியப்படைந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?"

"நமது நாட்டில் மசாலைச் சாமான் சேர்த்துக் கறி சமைப்பதைப் போல வேறு எந்த நாட்டிலும் சமைப்பதில்லை. மணம், குணம் எல்லாம் நமது 'சமையலில் மிளிர்கிறது. வெள்ளைக்காரர் இறைச்சியை அதிகமாக உண்ணுகிறார்கள். மிளகாயும் உப்பும் மட்டிலுமே அதில் சேர்க்கிறார்கள். நாம் இறைச்சியில் மசாலையோடு சிறிது கறி மசாலையும் சேர்த்துச் சமைத்தால் எத்தனை நன்றாக இருக்கிறது!"

"இறைச்சி சாப்பிடுவதைக் கேவலமாகச் சிலர் சொல்லுகிறார்களே; அவர்கள் பேச்சில் அர்த்தம் இல்லை என்று நான் கருதுகிறேன்."

"அப்படிச் சொல்லுகிறவர்கள் தாமே 'படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக!' என்றும் சொல்லுகிறார்கள்! அப்படியாயின் மரக்கறி உண்பதும் பாவம் என்று சொல்வதும்

“இன்னென்று. ஒருவர் சாப்பிடும் உணவைப்பற்றி மற்றவர் கேலி செய்வது நமது நாட்டில் வழக்கமாகிவிட்டது. வட இந்தியர் சாப்பிடும் கோதுமை உணவைப்பார்த்து நம்மவர் கேலி செய்தனர். இப்போதோ கோதுமையில்லாமல்நமக்குவாழமுடியாது போலிருக்கிறதே! கோதுமை நமது நாட்டில் புகுந்தது எவ்வளவு நன்மையாயிற்று! மேலும், அரிசியைக்காட்டிலும் கோதுமை சத்துவாய்ந்ததுகூட. பகலானாலும் இரவானாலும் சரி—ஒரு நாளைக்கு ஒரு வேளை கோதுமை உணவு சாப்பிடுவது மிகவும் நல்லதாம்!”

“என் கணவரும் அப்படிச் சொல்வதுண்டு. ஆனால் நான் கோதுமை மாவில் இது நாள் வரை எவ்வித உணவும் தயாரித்ததில்லை. கோதுமை ரவையில்உப்புமாச்செய்திருக்கிறேன். குழந்தைகளும் அவரும் உப்புமாவை விரும்புகின்றனர்.”

“உப்புமா நல்ல உணவு. நாள்தோறும் தோசை இட்டிலியென்று செய்து கொண்டிருப்பதில் என்ன நன்மை? உப்புமாவையும் சாப்பிடத்தான் வேண்டும்.”

“கோதுமை மாவில் சப்பாத்தி செய்யலாம்; இல்லையா?”

“சப்பாத்தி மாத்திரமல்ல. பூரி தோசை எல்லாம் செய்யலாம். பூரியும் உருளைக்கிழங்கும் மிக மிகப் பொருத்தமல்லவா?”

“அப்படியானல் கோதுமை நல்ல உணவுதான்.”

[தொடரும்]

நியாயம்தானே? செடிகொடிகளுக்கும் உயிர் இருக்கத்தானே செய்கிறதாம்!”

சரசுவுக்குச் சிரிப்பு வந்தது. பார்வதியின் அருகில் வந்தமர்ந்துகொண்டு, ருசிகரமாகத் தோன்றிய உரையாடலை மீண்டும் தொடர்ந்தாள்.

“பாவமும் புண்ணியமும் பார்த்துக்கொண்டிருந்தால் உலகில் வாழமுடியாதடி! எது நல்லதென்று தோன்றுகிறதோ, அதைத் தூய்மையாகச் சமைத்துச் சாப்பிட வேண்டியது! இறைச்சி சாப்பிடுகிறவர்கள் சாப்பிட்டு விட்டுப்போகிறார்கள்; அவர்களைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்வானேன்?”

பாலும் பாவையும்

[ஆசிரியர்: விந்தன். வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி-சென்னை 5. விலை 3-8-0]

விந்தனின் கதைகள் எல்லோரும் விரும்பிப் படிக்கும் தன்மை வாய்ந்தவை. எளிமையான இனிய நடை, நேரான கதைப் போக்கு, தடங்கலற்ற வேகம், சிந்தனைக்கு விருந்தளிக்கும் கருத்துத் திவலைகள் — இவை விந்தனின் கதைகள் கொண்ட தனிச் சிறப்புகள். அவருடைய சிறுகதைச் சிறப்புகள் யாவும் அவருடைய இந்த முதல் நாவல் (அப்படித்தான் நினைக்கிறேன்) 'பாலும் டாவையும்' என்ற புத்தகத்தில் முழுவதும் காணப்படுகின்றன.

இதுதான் கதை: சென்னையில் படித்த கல்லூரி மாணவி அகல்யாவை அவளுடைய பணத்தின்மேல் காதல் கொண்ட மாணவன் இந்திரன் கெடுத்து அவளிடம் பணம் பெற முடியாத காரணத்தால் கைவிட்டு ஓடுகிறான். அகல்யா மற்றொரு ஏழை இளைஞன் கனகலிங்கத்தை மணந்துகொண்டு தான் இழந்த சமூக அந்தஸ்தைத் திரும்பப் பெறத் துடிக்கிறாள். கனகலிங்கம் ஏழையாகவும் நல்லவனாகவும் இருந்ததால் அவளுடைய அவசரக் காதலை உடனே ஏற்கவில்லை. தயங்குகிறான். ஆனால் கதியற்றுத் தவிக்கும் அவளை அதிகப் பரிவு காட்டிக் காப்பாற்ற முயற்சிக்கிறான். அந்த முயற்சிக்கு மத்தியில் அவன் உயிர் சூழ்ச்சிக்கு இரையாகிறது. அகல்யா மீண்டும் வேறு ஒருவனுடன் வாழ ஆசைப்படுகிறாள். முடியவில்லை. சாகிறாள்.

வாழ்வையும் சாவையும், காதலையும் கல்யாணத்தையும் சரியாகப் புரிந்துகொள்ளாத இந்தக் கேடுகெட்ட நாட்டில் இந்த நாவலில் வரும் சம்பவங்கள் அத்தனையும் அடிக்கடி நிகழ்கின்றன. அந்த நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடித்து, தம்முடைய சொந்த விருப்பு வெறுப்புக்களால் பாத்திரங்களை அதிகம் பாதிக்க விடாமல் வாசகர்கள் முன்னே தொழில் புரியவிடுகிறார் ஆசிரியர். பாத்திரங்களைப் பற்றிய தீர்ப்பு வாசகர்களின் சிந்தனைக்கு விடப்பெற்றிருக்கிறது.

காதலின் நிறம் பலதரப்பட்டது. எத்தனை எத்தனையோ வர்ணங்கள் நிறைந்த வானவில் காதல் எனும் இன்ப உணர்ச்சி. இத்தகைய உள்ளுணர்வின் குறிப்பிட்ட ஒரு அழகான நிறத்தை வைத்துக்கொண்டு இந்தச் சித்திரம் கவர்ச்சிகரமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. இது

பணக்காரி ஒருத்தியின் காதல் கதை. காதலுக்கும் பணத்திற்கும் உள்ள தொடர்பு, பணத்திற்கும் மற்ற மனிதப் பண்புகளுக்கும் உள்ள தொடர்பு எல்லாம் இந்தக் கதையில் கதைப் போக்கோடு பின்னிக் கிடக்கின்றன. கதாநாயகியிடம் பணத்தின் பண்புகள் இயற்கையாகக் குடிகொண்டிருப்பதைக் குற்றம் என்ற முறையில் வர்ணிக்காமல், வாசகர்களின் அனுதாபம் தொடர்ந்து அவளிடம் இருக்கச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. கதாநாயகன் கனகலிங்கம் நேர்மையானவனுகவும், வெகுளியாகவும் இருக்கிருன். இந்த நல்ல குணங்களால் மனிதன் படும் பாட்டை ஆசிரியர் ரசமாகச் சொல்கிருர்.

இந்தக் கதைக்குரிய கருத்து மிகச் சாதாரணமானதுதான். ஆனல் அந்தச் சாதாரணக் கருத்தைப் புதிய போக்கில் சொல்லியிருப்பது ஆசிரியரது திறமையைக் காண்பிக்கிறது. நாவலை இன்ன வழியில், இன்ன முறையில்தான் எழுதவேண்டுமென்று யாரும் சொல்ல முடியாது. எத்தனையோ வழிகள் இருக்கின்றன. எத்தனையோ வழிகள் வரப்போகின்றன. எந்த வழியில் எழுதினுலும் நாவலின் பொதுச் சிறப்புக்கள் அமைந்துவிட்டால் போதும். இந்த நாவலின் உருவாக்கம் தமிழுக்குக் கொஞ்சம் புதுமாதிரி; அதிகமான கதை அமைப்பு முறைகளும், கதாபாத்திரங்களும் இல்லாமலே, முக்கிய பாத்திரங்களின் பேச்சுக்களாலேயே கதையை வளரவிடும் சுலபமான, ஆனல் நல்ல வழி இது. இந்த வழியில் முயற்சி செய்திருக்கும் ஆசிரியருக்கு இந்த நாவல் வெற்றியின் முதற்படி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அகல்யா தன்னுடைய முதற் சந்திப்பிலேயே முன்பின் தெரியாத கனகலிங்கத்தோடு அதிகமாகப் பேசுகிருள். எடுத்த எடுப்பில் அப்படி அவளைப் பழகவிட்டிருப்பது சற்று யோசனை செய்திருக்கவேண்டிய விஷயம். 'நாற்பது வோல்ட்', 'எண்பது வோல்ட்' என்று மீட்டர் முறையில் சிரிப்பை அளவிடுவது எல்லா வாசகர்களும் புரிந்துகொள்ள முடியாதது. ஆனல் இவையெல்லாம், சிந்தனை செய்யவென்றே எழுதப்பெற்ற இந்தக் கதைக்கு முக்கியமான குறைகளல்ல.

சித்திரக்காரர் மணியத்தைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. மணி மணியான படங்கள் புத்தகத்தின் உள்ளும் புறமும் சுடர்விடுகின்றன. கற்பனையழகு மிளிரும் பல சித்திரங்களை இப்புத்தகத்தில் காணமுடிகிறது.



ஸ்டார் பிரசுரத்தாரைப்பற்றி இரண்டு வார்த்தைகள் எழுதா விட்டால் இந்த மதிப்புரை பூர்த்தியாகாது. நல்ல காகிதம், நல்ல அச்சு, உறுதியான அட்டை, அட்டைக்கு மேல் பல வர்ண 'ஜாக்கெட்'—இத்தனை நன்ருகவும், அழகாகவும் கொண்டு வந்திருக்கிருர்கள். பழுப்பேறிய குப்பைக் காகிதத்தில் உருத் தெரியாத அச்சுக்களை நிரப்பி வாசகர்களையும் ஆசிரியர்களையும் மலிவுரகத்தில் சேர்க்கும் பதிப்பகத்தார்களைப் போல இல்லாமல் இந்த நாவலைச் சிறந்த முறையில் வெளியிட்டதற்கு அவர்களைப் பாராட்டவேண்டும். மலிவு ரக வெளியீடுகளில் சமீபத்தில் வெளிவந்த பல நல்ல ஆசிரியர்களின் கதைகளில் பெரும் பகுதி மிகச் சாதாரணமாக இருந்தன என்பதையும், ஆசிரியர்கள் சிலர் அவர்களுடைய மலிவான வருமானத்திற்குத் தகுந்தாற் போல் அவசரமாக எழுதித் தங்களையும் மலிவாக்கிக்கொள்கிருர்கள் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

ஆனல் இந்த வெளியீடு அதிக விலைப் பிரசுரம்தான். உள்ளே இவ்வளவு அதிகமான படங்கள் தேவையில்லை. படங்களுக்கும் இடைவெளிகளுக்குமாக ஆகியிருக்கும் சுமார் ஐம்பது பக்கங்களைக் குறைத்து விலையிலும் ஒரு ரூபாய் குறைத்துப் போட்டிருக்கலாம். வெளியீடும் கச்சிதமாக இப்போதுள்ள தோற்றத்தைப் போலவே சிறப்பாக இருக்கும். அதிகமான வாசகர்கள் சுலபமாக வாங்கிப் படிப்பார்கள்.

நடக்காத கதையா?

சுகி

"சட்டப்படி நடக்கிறது என்றால் அதெல்லாம் நடக்கிறகாரியம் இல்லே. அங்கேயும் சில நீக்குப் போக்கு இருக்கிறது" என்று திருவடியா பிள்ளை சொன்ன போது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்காதா?

சமீபத்தில் அவருடைய உறவினர் ஒருவர் தமது பெண்ணைக் கான்ஸ்டபிள் கந்தசாமிக்குக் கொடுத்திருந்த விவரம் எங்களுக்குத் தெரியும். அந்த 12-ம் நம்பர் கலியாணத்திற்குத் திருவடியா பிள்ளை போயிருந்தார்.

"என்ன அண்ணச்சி, கலியாணத்திலே ஏதாவது நடந்ததா?" என்றேன்.

"ஒரு அனுபவம், கேளுங்கள்" என்று சொல்ல ஆரம்பித்தார்.

அத்திக்குளம் சரகத்தில் இருபத்து மூன்று போலீஸ்காரர்களும் ஒரு ஏட்டய்யாவும் ஒரு ரைட்டரும் ஒரு இன்ஸ்பெக்டரும் உண்டு. அத்திக்குளத்தில் மக்கள் அப்பாவிகள். ஒருவர் பொருளை ஒருவர் திருடமாட்டார்கள். திருடினாலும் அகப்பட மாட்டார்கள். அவ்வளவு யோக்கியமானவர்கள். அயலூர் நபர்கள் அங்கே திருடித் தப்பித்துப் போவதென்பது அத்தைக்கு மீசை முளைக்கிறபோதுதான். இப்படி வளமான நிலையில் ஒரு நாள் இரவு எட்டு மணி சமயம்.

ஒரு கரிய உருவம்; அரையில் அழுக்கு வேட்டி; எண்ணெய் காணாத பரட்டைத் தலை; அங்கங்கே கேட்டுக்கொண்டு நேரடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் வந்துவிட்டது.

பாரா நின்ற போலீஸ் வந்த உருவத்தைத் தடுக்கவில்லை. நேரே டைரிகளைப் பார்வையிட்ட இன்ஸ்பெக்டர் முன்னால் போய் நின்றது. அவர் அவனை அடையாளம் கண்டுகொள்வதற்கு முன்னால் "எசமான் நான்தான் செந்திவேல்" என்று அந்த உருவம் கூறியது.

"டேய் நீயா? இங்கே எங்கேடா வந்தே?" என்று அன்போடு கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"எசமான், நீங்க முன்னே இருந்தீங்களே, நீலியூர், அந்த ஸ்டேஷனுக்குப் போனேன். நீங்க மாத்தலாகி இங்கே அத்திகுளம் வந்திட்டீங்கன்னு தெரிஞ்சுது."

"ஆமாடா. உன்னை மதுரை ஜெயிலுக்கு அனுப்பினேனா, அதே தேதியிலே எனக்கும் மாற்றலாகி இந்த ஸ்டேஷன் வந்திட்டேன். முன்னே இருந்த ஸ்டேஷனிலே போய் என்னை விசாரிச்சயா?"

"ஆமா, எசமான், அவுங்க அத்திகுளம் மாத்தலாகி இங்க

இருக்கிறதாச் சொன்னுங்க. அங்கே இருந்து நடந்தே வந்தேன். நடந்து...” என்று பெருமூச்சு விட்டது அந்த உருவம்.

“ஏ மூதி செலவுக்குப் பணம் ஏது உனக்கு?”

“ஜெயில்லே இருந்த நாளுக்கு ஒரு நாளைக்கு நாலு தம்பிடியோ என்னவோ போட்டுக் கொடுக்கிற காசு சேந்துபோச்சு. அஞ்சாறு ரூபாய் கொடுத்தாங்க.”

“கொடுத்தாங்களா?...சரி நீ சாப்பிட்டாச்சா?”

“எட்டணு இருக்குது எசமான்.”

“அணுவை வைச்சுக்கோ. இந்தாப்பா. அங்கே யாரு நம்பர் 12, இவனை நம்ம வீட்டிலே விட்டு வை.”

“எசமான் நம்மளைக் கவனியுங்க.” வந்த உருவம் மறுபடியும் பாட்டைத் திருப்பியது.

“நீ வந்து ஒருமாசம்ஆகுதா?”

“நாளை விடிஞ்சாப் பத்து நாள் ஆகுது ஜெயிலை விட்டு வந்து.”

“சரிடா அமாவாசை, வரட்டும். அதுவரை, இங்கே அங்கே சோறு போடுவாங்க. போய்ச் சாப்பிடு” என்று சொல்லிவிட்டு அவர் வேலையில் ஆழ்ந்தார்.

செந்திவேல் பார்வைக்கு ஒரு பக்காத் திருடன். அவன் திருடி ஜெயில் சென்றவன். வயதும் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டது. அதற்காக யாராவது பென்ஷன் கொடுக்கப் போகிறுர்களா? அது எது? ஆனல் செந்திவேல் சோம்பேறி, ஏதோ கொஞ்ச நேரம் வேலை, சாப்பாடு, நிம்மதியான தூக்கம்—இந்த மூன்றும் உயர்வாக இருக்கவேண்டும் என்பதில்லை. ஏதோ வேளாவேளைக்கு வேலை, என்னமாவது சாப்பாடு, எங்கேயாவது தூக்கம் அவ்வளவே, அவனுக்குப் போதும்.

செந்திவேல் மறுநாள் காலை அத்திக்குளத்துப் போலீஸ் சிப்பந்திகள் வீடுகளுக்கு அறிமுகமாகிவிட்டான்- தண்ணீர் சுமப்பதும், அரிசி மினுக்குவதும், ஆட்டுக்கல் அறைப்பதுவும் அவன் வேலைகள். தயிரும் சாதமும் தின்பான். ரேஷன் வாங்குவது முதல் குழந்தைகளைத் தூக்கிச் சுமப்பதும் அவனே! அவன் இல்லாமல் சிப்பந்திகளின் மனைவிமார்களுக்கு உதவிக் காரியங்கள் நடக்காது.

‘செந்திவேலு’ ‘செந்திவேலு’ என்று எல்லோரும் கூப்பிடுவார்கள். வேலை செய்ய மட்டுமன்று; உண்ணவும் கூப்பிடுவார்கள். அவன் மனம் வேலை செய்துவிட்டால் சாப்பாடும், சாப்பிட்ட பிறகு தூக்கமும் விரும்பும். தூங்கினல் அவனுக எழுந்தால்தான் உண்டு. துப்பாக்கி வெடியைப் போட்டுச் சுட்டாலும் எழமாட்டான். அவன் மனதை மாற்றவோ திருத்தவோ முடியாது.

செந்திவேலு அந்த இருபத்தாறு வீடுகளுக்கும் அவசியப் பொருளாகி விட்டான். அங்கங்கே கிடைக்கும் கஞ்சி முதல் இனிப்புப் பலகாரம் வரை பல பொருள்களும் அவன் வயிற்றுக்குள் அடக்கம். ஆனாலும் அந்த ஆத்மா என்னவோ ‘ஜெயில்’ ‘ஜெயில்’ என்று துடித்துக்



கொண்டிருந்தது. அடிக்கடி இன்ஸ்பெக்டரைப் பார்த்தும் வேண்டிக்கொண்டது. அவன் தொந்தரவைப் பொறுக்காமல் இன்ஸ்பெக்டர் பயமுறுத்திப் பார்த்தார். அத்திக்குளம் பக்கத்தில் திருட்டும், திருடனும் அபூர்வம். அதனுல்தானே இத்தனை சங்கடம். போலீஸ் இன்ஸ்பெக்டர் மிகவும் கஷ்டப்பார். தம்மைப் பரமென நம்பி வந்தவனை எப்படி ஜெயிலுக்கு அனுப்புவதென மனக்கஷ்டம் கூட அடைந்தார்.

* * *

[“என்ன அண்ணுச்சி கதை ரொம்ப அதிசயமாக இருக்கிறதே. அபார கற்பனை” என்ருேம். ஆனுல், திருவடியா பிள்ளை தமக்குள்ள பாராட்டுதலை ஏற்றுக் கொள்ளாமல் எங்களை ஏறிட்டுப் பார்த்தார். “கதையை நிறுத்தி விடுகிறேன்” என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். இந்த அதிசய அபூர்வ, ஆனுல் நடந்திருந்தால் விறுவிறுப்பான கதை மேலே எப்படி முடியப் போகிறதோ என்று நாங்கள் சும்மா இருந்தோம். டக்கெனக் கதையைத் திடுக்கிடும் கட்டத்தில் கொண்டுவிட்டார்.]

எங்கும் இருள். இருள் என்ருல் அத்திக்குளத்து இருட்டு. சோலைகளில் பகலிலே சூரியன் கால்வைக்க அஞ்சுவான் என்ருல் அவ்வூர் இருட்டைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா ? இதில் அமாவாசை வேறு. எங்கும் இருளின் ஆதிக்கம். அவ்வூர் மக்களில் பெரும்பாலோர் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற அமெச்சூர் சமூக நாடகம்

பார்த்து விட்டு வரும்போது மணி இரண்டு. பூசாரித் தெருவின் திருப்பத்தில் ஐந்தாமியான் கடையில் யாரோ பூட்டை புடைக்கும் சப்தம் கேட்டது. கேட்டது என்றால் அது காதுங் காதும் வைத்த மாதிரியல்ல. நன்றாகக் கேட்டது. நாலு பேர் காதில் விழும்படி கேட்டது. தன் கருமம் பூட்டுடைப்பது என்று சொல்லுகிற மாதிரி உடைத்தான் செந்திவேலு.

இருட்டில், அமாவாசையன்று ஜன நடமாட்டம் ஏற்படுகிற போது பூட்டையுடைக்கும் சப்தம் பொதுஜன கவர்ச்சி தருவது என்பதைச் செந்திவேலு உணர்ந்து செய்தானோ, அல்லது தனக்கு இட்ட கட்டளைப்படி செய்தானோ அது அவனுக்குத் தான் வெளிச்சம்.

"பிடி, பிடி" என்று கத்தியும் அவன் ஓடினால்தானே! கும்பல் கூடி விரட்டிப் பிடிக்குமுன்னதாக, ஸ்தலத்தில் போலீஸார் தோன்றி, சாட்சிகள் இங்குமங்கும் நழுவி விடாதபடிக் கும்பலை அப்படியே அணைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்து குறிப்பு எடுத்தார்கள். செந்திவேலுவின் கையில் சுத்தி, பழைய துருப்பிடித்த திறவுகோல் கொத்து, ஒரு வெட்டிரும்பு முதலானவை இருந்தன. அவை அத்திகுளம் சந்தையில் நாலு நாட்களுக்கு முன் யாரோ நாலணா விலை கொடுத்து வாங்கியவை என யார் அறிவார்கள்? தான், பசியின் கொடுமையால் அப்படித் திருட முனைந்ததாகவும், அதனால் பிடிபட்டதாகவும் செந்திவேல் சொன்னான். இன்ஸ்பெக்டர்முதல் கைதியைக் காபந்து செய்த உடுப்புபோட்ட போலீஸார் உள்படச் சிரிக்காமல் கைதியின் வாக்குமூலத்தைக் கேட்டனர்.

கைதி 'லாக்கப்பில்' அடைபட்டுக் கிடந்தான். அமாவாசை தன் ஆதிக்கத்தைச் செலுத்தி, இருளை இன்னும் அதிகப்படுத்தியபோது, செந்திவேலு உள்ளத்தில் மட்டும் இருள் எதுவுமின்றிக் கவலையின்றித் தூங்கிக் கொண்டிருந்தான். இனி அவன் சிரமப்பட்டாலும், படாவிட்டாலும் அதிகாரச் சிவப்பு நாடா அவனை அதன் அரவணைப்பிலே கொண்டுபோய்ச் சிறைக்குள் சமாதி செய்துவிடும்.

* * *

["என்ன திருவடியா பிள்ளை அண்ணாச்சி, இந்த கேஸ் ஜோடனை என்றா சொல்லுகிறீர்கள்?" என்று நாங்கள் கேட்டோம்!

"ஜோடனை என நான் சொல்லவும் இல்லை. செந்திவேலு விரும்பியவிதம் நடைபெற்றது என்றும் சொல்லவில்லை. குறைக் கதையும் கேட்கப் பிரியமிருந்தால் சொல்லுகிறேன்" என்றார். அவருடைய கற்பனையை மேலும் கேட்கப் பிரியப்பட்டோம்.]

அத்திகுளம் சரகத்தைச் சார்ந்த போலீஸ் கோர்ட்டில் செந்திவேலு பொய் சொல்லவில்லை. அதற்கு மேலாக நடந்த

சப் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டிலும் உண்மையையே சொன்ஞன்.

"நீயேன் திருடிஞய்?"

"வயிற்றுக்கு இல்லே."

"அதனுல்...?"

"அந்தக் கடைப் பூட்டை அமாவாசை இருட்டிலே உடைத்தேன்."

"எதற்காக"

"ஏதாவது எடுக்கலாம் என்று."

"திருடினதை ஒப்புக்கொள்ளுகிருய்?"

"ஆமாம், எசமான்."

செந்திவேலு குற்றவாளியென எண்பிக்கப்பட்டது. மேற்படி கேஸில், பிடித்துக்கொடுத்த அத்திகுளத்து நாலேந்து நபர்கள் சாட்சிகள் சொல்லி அவனே ஜெயிலுக்கு அனுப்பிவைத்தனர்.

மூன்று ஆண்டுகள் செந்திவேலு தன் கனவு பூமிக்குள் ஐக்கியமாஞன்.

ஆனல் செந்திவேலு போல வேலே செய்யத் தங்களுக்கு ஆள் அகப்படவில்லேயெனப் போலீஸ் வீட்டு அம்மாக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

ஆறு மாதத்திற்குப் பிறகு ஒரு கொள்ளேக்காரனேப் பிடித்ததற்காக நாலு போலீஸ் ஜவான்களுக்குத் தலா மூன்று ரூபாயும் ஏட்டய்யாவுக்கு ரூபாய் பத்தும், இன்ஸ்பெக்டருக்கு ரூபாய் ஐம்பதும் பரிசு கொடுத்தது பிரிட்டிஷ் அரசாங்கம்.

— கதையை முடித்தார் திருவடியா பிள்ளே.




"சீ, கழுதை! நீயும் உன் முஞ்சியும்! இனிமே வாயைத் திறந்தியோ செம்மையா உதைச்சுப்பிடுவேன்!"

"அப்படிச் சொல்லுங்கள் திருவடியா பிள்ளே, அண்ணுச்சி. வெள்ளேக்காரப் பாவி ஆண்ட நாளிலே இது நடந்திருக்கும் ஐயா, நடந்திருக்கும்" என்று நாங்கள் தட்டிக் கொடுத்தோம். திருவடியா பிள்ளே சிரித்தார்.

தமது கற்பனேக் கதையை நம்பி ஏமாந்துவிட்டார்களே எனச் சிரித்தாரா? இல்லே, உண்மையைச் சொல்லியும் புரியவில்லேயே எனச் சிரித்தாரோ? எதற்காகச் சிரித்தார் என்று எங்களுக்கு விளங்கவில்லே.

"என்ன அண்ணுச்சி சிரிக்கின்றீர்கள்?"

"சட்டம் எவ்வளவு வேடிக்கையானது என்று நினேக்கிறபோது சிரிப்பு வந்தது" என்ருர்.



முந்திவிட்டாள்!

அட்டைப்படக் கதை : எழிலன்

டாண்......டாண்......!

மாதா கோவில் மணிக்கூண்டு, திருச்சபையினரை அறைகூவி அழைத்த ஓசை வைகறையின் அமைதியைக் கிழித்துக் கொண்டு, வான வீதியில் பரந்து ஒன்றியது. நான் அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கையில் விவிலிய நூலைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்......

ஆலயத்திலே 'பிரார்த்தனை' தொடங்கிவிட்டது. பாட்டு முடிந்து பாதிரி என்னென்னவோ 'அளந்து'கொண்டிருந்தார்! பாபாத்மாக்களையெல்லாம் இரட்சித்து அவர்களை மோட்ச லோக ஜீவிகளாக்குவதற்குப் பக்குவப்படுத்துவதாக அவர் எண்ணம்!

ஊசி விழுந்தாற்கூட அந்த ஓசை கேட்கிற அளவுக்கு ஆலயத்திலே அமைதி குடிகொண்டிருந்தது. கண்ணாடிப் பாத்திரத்தைக் கற்றரையில் வைப்பதுபோல் மெள்ள மெள்ள நடந்து, உள்ளே காலியாய்க் கிடந்த ஒரு பெஞ்சின் ஓரத்தில் உட்கார்ந்து சிறிது நேரம் செபம் செய்தேன். சுத்த அபத்தம்! நானாவது செபம் செய்வதாவது? ஒப்புக்காகச் சிறிது நேரம் கண்களை மூடித் திறப்பதற்குத்தான் என் அகராதியில் "செபம்" என்று பெயர்!

நான் கிராமவாசி. பட்டினத்துக்குப் படிக்க வந்து இரண்டு மூன்று நாட்கள் தான் ஆகின்றன. நான் சேர்ந்து படிக்கும் கல்லூரிக்கு அடுத்த 'காம்பவுண்ட்' தான் தேவாலயம். தேவாலயத்துக்கும், கல்லூரிக்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு. அத்துடன் என் பெயர் வேறு கிறித்தவ மதத்துக்கு 'இலவச விளம்பரம்' செய்துகொண்டிருந்தது. இவற்றில் எக்காரணத்திற்காகவும் நான் தேவாலயத்துக்குப் போக வேண்டியவனல்ல என்றாலும், பட்டினத்துக்குப் புதியவன் என்ற காரணத்தால், அதைப் பார்வையிடவேண்டுமென்ற என் ஆசை—ஆராய்ச்சி எண்ணம் தான் போகத் தூண்டியது. பழமையும் பெருமையும், வலிவும் வனப்பும் வாய்ந்த அந்த டச்சுத் தேவாலயத்தைப் பார்த்து நான் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்தேன். "எத்தனை ஏழைகளின் உழைப்பு சுரண்டப்பட்டதோ? எத்தனை தொழிலாளிகள் தங்கள் இரத்தத்தைச் சிந்தி உருவாக்கினார்களோ?..." வரிசை வரிசையாகச்சுவரில் பதிக்கப்பட்டிருந்த, மறைந்த மதக் குருக்களின் 'கல்வெட்டுக்கள்', மண்டபத்தின் மேல் தளத்தை அழகுபடுத்திய வர்ண வேலைப்பாடுகள், கண்ணாடியில் வரையப்பட்டிருந்த "யேசு நல்ல மேய்ப்பன்" என்ற கருத்துடைய சித்

திரம் இவற்றில் திளைத்திருந் தேன்.

"அழகில் சிறந்த கோமானை நான் எப்போ காண்பேனோ?......"

இந்த அழகான கருத்துடைய இன்னிசைக் கீதம் என் சிந்தனையைத் தடைப்படுத்தியது. பாடுபவர்களில் முக்கால்வாசிப் பேர் கருமே பெண்கள். கல்லூரிக் கட்டழகிகள்! அந்தக் குயிலிகள் பாடினார்கள். பாட்டென்னவோ நல்ல கருத்துடன் அமைந்து இனித்தாலும் அதைக் கேட்டு ரசித்தவர் குறைவு; பார்த்துத் தான் ரசித்தார்கள்!

எல்லோரும், ஏசுநாதரை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு தான் பாடியிருப்பர் என்பது என்னநிச்சயம்? ஒருவேளை சிலர் தங்களது...... அழகில் சிறந்த கோமானையல்ல, பூமானையே எண்ணியும் பாடியிருக்கலாமல்லவா?

பாட்டு முடிந்தது.

பாதிரி உரத்த குரலிலே "ஜெபம் செய்வோமாக!" என்று கூறினர்.

"பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே...உம்முடைய நாமம் 'பரிசுத்தப்படுவ' தாக...உம்முடைய இராச்சியம் வருவதாக..."

எல்லோரும் கண்களை மூடிக் கொண்டிருக்கும்போது நான் கண்களை மெதுவாகத் திறந் தேன். ஏசுவிருக்கிறாரா என்று சுற்று முற்றும் பார்த்தேன். இன்னும் பல காட்சிகள், பல கோணங்களில் தெரிவதையும் நான் பார்க்காமலிருக்க முடியவில்லை! நன்றாகப் பார்த்தேன்.

சிந்தனையைத் துண்டித்துக் கொண்டு பார்வையைச் சுழற்றினேன். என்ன ஆச்சரியம்! பார்வையில் ஒரு மானின் விழிபட்டுத் தெறித்தது. 'அவள்கூடஎன்னைப்போல ஒரு 'கன்னி'யே தானு? உண்மையில் தேவ பக்தியிருந்தால் அப்படிச் செய்வாளா?'

எனக்கு முன்னே மூன்றுவது பெஞ்சில் வலது கைப் பக்கமாகக் கிட்டத்தட்ட நாற்பது பாகைக் கோணத்தில் சுமார் பத்து அடிகளுக்கப்பால் அவள் இருந்தாள். மயக்கத்தையே சொந்தமாக்கிக் கொண்ட, நீலச் சேலையை அவள் உடுத்தியிருந்தாள். உடுத்தியிருந்தாளா? அவள் தளிருடலை மறைத்திருந்தது அலங்கரித்தது அந்தச் சேலை. அதற்கேற்றாற் போல, உதட்டின் துடிப்பைப் பிரதிபலிக்கும் சிவப்பு ஜாக்கெட்! சிவப்பு ஜாக்கெட்டின்மீது தவழ்ந்து, மெல்லென வீசும் இளந் தென்றலில் அசைந்தாடும் போது அந்தத் தாவணிக்கே ஒரு பெருமை.

காதல் கீதம் பாடும் அந்த வேல்விழிகளை என் நெஞ்சில் பாய்ச்சி விட்டு அவள் குனிந்து கொண்டாள். வேதனை மிக்க அந்த இன்ப நினைவில் திளைத்து, விடாப்பிடியாக 'அவளையே பார்ப்பேன்' என்று அடம்பிடித்த மனம், ஏகோபித்த குரலில் 'ஆமென்' என்ற சத்தம் கேட்டுத் தன்னுணர்வடைந்தது.

பிரார்த்தனை முடிந்து வெளியேறிக் கொண்டிருந்த பக்த

கூழாத்துடன் நானும் வெளியேறினேன்...

எனக்குச் சற்று முன்னே அடிமேலடிவைத்து லாவகமாக அசைந்து அசைந்து அவள் நடந்து கொண்டிருந்தாள். ஐயோ! பொல்லாத மனஉருக்கிகள், கொலைகாரிகள்......இந்தக் கூட்டம்!

நடையிலே மட்டும் விட்டாளா? என் உயிரை நைத்துப் பிழிந்தே விட்டாள். அவள் முன்னே நடந்து கொண்டிருந்தாள். நான் அவள் பின்னே தொடர்ந்து கொண்டிருந்தேன்.

ஏன் தெரியுமா?

நான் தங்கியிருந்த வீட்டுக்கு அடுத்த வீடுதான் அவள் வீடு. மெதுவாகப் படிகளில் ஏறிக் கதவைத் திறந்துகொண்டு திரும்பினாள்! பார்த்தாள்!!

எவ்வளவு நல்லவள் அவள்! வேல்பாய்ச்சிய ரணத்துக்கு மருந்து பூசிவிட்டு மறைந்து விட்டாள். அவள் சிந்திவிட்டுப் போன 'புன்னகை'தான் அந்த ரணம் ஆற்றும் மருந்து.

○

அவள் அழகைப்பற்றி இன்றும்தான் ஆச்சரியப்படுகிறேன். அணுஅணுவாகக் கண், காது, மூக்கு, வாய் இப்படியே தனித்தனியாக வருணிக்க எனக்கு வார்த்தைகள் கிடையாது. அவளைப் பொறுத்த வரையில், இயற்கை தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

நான் கற்பனை செய்கிறேன்: குழந்தையிலே பிறந்த மேனியோடு அவளை யாரும் பார்த்திருந்தால் ஆச்சரியப்பட்டிருப்பார்கள். பழுப்புத் தந்தத்திலே, செதுக்கிச் செய்த சிலை, ஏதோ யந்திர உதவியால் அசைகிறது என்று எண்ணிப் பின் ஏமாந்திருப்பார்கள். ஆனால் இன்று...? ஒரே வார்த்தையில் சொன்னால் அவள் பார்ப்போரின் "இமை பிடுங்கி" என்பதைத் தவிர, வேறு வார்த்தைகளில் என்னால் வருணிக்க முடியாது! பார்த்தவர்கள் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். விழிகளை மூடும் இமைகளை அவள் பறித்துவிடுவாள்!

அந்த அலங்காரி அழகுக் கலையையும் அறிந்திருந்தாள் என்றுதான் சொல்லவேண்டும். அலங்காரம் என்ற பெயரால் அலங்கோலப்படும் பெண்களைப்போல இரண்டடி உயரமுள்ள குதியுயர்ந்த சப்பாத்துகளைப் போட்டுக் குதித்துக் குதித்துத் 'தவளையாட்டம்' ஆட அவளுக்குத் தெரியாது. சிகையைச் சித்திரவதை செய்து, 'வளையம்'போல ஒன்றை ஆக்கிக் கொண்டதை நான் பார்த்ததில்லை. கண்ணுக்கு மை தீட்டியது கிடையாது. 'லிப்ஸ்டிக்' அழகியல்ல அவள்.

கையிலே அதிகம் வளையல்கள் கிடையாது. இடது கையில் ஒரு சிறிய கெடியாரம்! மென்மையான நாடித் துடிப்போடு தொடர்ந்து அதுவும் துடிக்கும்.

அவள் பெயர் அழகானது. லில்லி! லில்லி மலரை முன்பு

நான் பார்த்ததில்லை. ஆனால், அந்த மலர் எப்படியிருக்கும் என்று இப்போது என்னால் சொல்ல முடியும். லில்லி மலர் அவளைப் போலத்தான் அழகாக, மென்மையாகச் சுழன்றடிக்கும் சுழல் காற்றில் ஒடிந்துவிடுமளவு உறுதியற்றதாக இருக்கும். அவளைப்போல அது நறுமணம் பரப்பும். அவள் இதழ்களில் இருப்பது போல மலரின் இதழ்களிலும் தேன் இருக்கும். அவள் நம்மை யெல்லாம் வண்டாக்கி அழைக்கிறாள். அதுபோல மலரும் வண்டினங்களை 'வா'வென்றழைக்கும்.

எங்கள் தொடர்பு ஒட்டிக்கொண்டது. நட்பு வளர்ந்தது. நான் புத்தகம் கொடுத்தேன்; அவள் படித்தாள். படித்ததைப் பற்றி விமர்சனம் நடந்தது. 'இலக்கிய சர்ச்சை' நடத்தினோம். சரி என்றோம், பிழை என்றோம். பின்பு மாற்றி ஒருவரை யொருவர் புத்திப் பரீட்சை நடத்தினோம். சரியென்றதைப் பிழையென்றோம், பிழை யென்றதைச் சரியென்றோம்!

நாங்கள் வளர்ந்தோம்......

O

அவள் கன்னிப் பெண்ணல்ல, கலியாணமானவள். 'தாய்' என்ற உன்னதப் பதவியையும் பலஆண்டுகளுக்கு முன்னரேயே அவள் 'பெற்று'விட்டாள்.


நான் 'இன்டர்' இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன். அதே கல்லூரியில் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் படிக்கிறான் அவள் மகன்! அவன்தான் மூத்தவன். அவனையடுத்து மூன்று குழந்தைகள். அடுத்த குழந்தை பெண். 'இன்றோ, நாளையோ' என்று இருக்கிறாள். மற்றவர்கள் சிறுவர்கள்; ஆண்கள்.

அவள் கணவன் ஒரு டாக்டர். எங்கோ வெகு தூரத்துக்கப்பால் உள்ள ஒரு சிறு தீவில் வேலை. ஆண்டிலே ஒருமுறைதான் அவர் வருவார். தொடர்ந்தாற் போல் ஒரு மாதமோ, பத்து நாட்கள் கூடவோ தங்கியிருந்து விட்டுப் போய் விட்டால், மறுபடியும் அடுத்த ஆண்டு அதே மாதத்தில் தான்வருவார். அப்பப்பா!...எவ்வளவு கொடிய வேதனை......

இதை எனக்கு அவள் சொல்லவில்லை. அவளுடைய தம்பி சொன்னான். இல்லை இல்லை!! தம்பியல்ல — மகன்! மறுபடியும் நான் அப்படித் தான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்......

அவளை முதலில் பார்த்த போது நிச்சயமாக அவள் ஒரு "குடும்பப் பெண்" என்று மட்டும் ஊகித்துக் கொண்டேன். அத்துடன், அந்த வீட்டிலே உலாவிய அந்தக் கடைசிச் சிறுவர்கள் இருவரையும் தவிர மற்றவர்கள் சகோதரர்கள் என்று தான் எண்ணிக்கொண்டிருந்தேன்...ஆனால் என் எண்ணம் தவறு என்று பின்புதான் தெரிந்தது...

புதிதாக வெளிவந்த ஒரு 'காதல்' நவினத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, அவள் வீட்டுப் படிகளில் 'கடகட'



வென ஏறித் 'தடதட' வெனக் கதவைத் தட்டினேன். கதவைத் திறந்துகொண்டு அந்த இளைஞன் வந்தான்.

"என்ன மிஸ்டர்! அம்மாவிடம் வந்தீர்களா? இப்படி உட்காருங்கள், இதோ அழைத்து வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு, உள்ளே ஓடினான். நான் திடுகிட்டுப் போனேன்.

என்ன? அவள் அவன் தாயா? என்னால் நம்ப முடியவில்லை. கிட்டத்தட்ட, 14 வயதுள்ள அந்த இளைஞனைப் பெற்றெடுத்த அவள் இன்னும் குமரி போலல்லவா காட்சியளிக்கிறாள்! இருக்கும்; அவள் ஒரு டாக்டரின் மனைவியல்லவா? உடற் பாதுகாப்பு அவளுக்குத் தெரிந்திருக்கும். இளமையழகு சிதைந்து போகாமலிருக்க அவள் கணவன் அவளுக்குக் கற்பித்திருப்பான்.

மறந்துவிட்டேனே. ஆமாம். அவன் அவள் சகோதரனல்ல. மகன். மகன்தான்! பெற்ற மகன்!!

அழகும், நல்ல குணமும் படைத்த அந்த இளைஞன் என்னோடு மிகவும் நெருங்கிப் பழகினான். கண்ணியமாக நடந்து கொண்டான்.

"நீங்கள், நேற்று அம்மாவிடம் கொடுத்தீர்களே அந்த நாவல்......நான் கூட அதைப் படித்துப் பார்த்தேன். மிக அருமையாயிருக்கிறது... அதிலே

வருகிற 'வில்லன்'......"என்று விமர்சனத்தை விரிப்பான், என்னிடம்.

வில்லன்...என்றதும், அந்த வார்த்தை என்னையே சுடுவது போல நான் திகைப்பேன். அவனுடைய தாயின் இன்ப வாழ்வில் குறுக்கிடும் வில்லனாக நான் மாறிவிட்டேனா என்ற சபலம், வெட்கம், பயம் எல்லாமே மாறி மாறிப் படையெடுக்கும். என்னைப் பற்றி அவன் தவறாக எண்ண மாட்டானா என்று மனம் குதுகுதுக்கும்.

யாரும் தவறாகத்தான் எண்ணிக்கொள்வார்களே தவிர, நாங்கள் தவறவேயில்லை! ஆனால் தவறுக்கும், நேர்மைக்குமிடையே உள்ளத்துக்கும் உணர்ச்சிக்குமிடையேதான் போராடிக்கொண்டிருந்தோம்.

ஏதோ ஒரு இனம் தெரியாத கவர்ச்சியில் நான் கட்டுண்டு, அவளின் அன்பைப் பெற வேண்டும் என்று தவித்தேன்.

ஆனால் துணிவு இல்லை. தெம்பு என்னைக் 'கண்ணாமூச்சி' காட்டியது. அவளை ஒரு நாளைக்காவது பார்த்து ஒரு வார்த்தையாவது பேசாவிட்டால் நான் வேதனையடைந்தது என்னவோ உண்மைதான். ஆனால் இருவரும் பேசும்போது, தெரிந்தோ தெரியாமலோ அவள் சொல்லிவிட்ட ஒரு சொல்லையோ அல்லது கருத்தையோ வைத்துக்கொண்டு, 'கிளியார் தட்டு' ஆடி, அவளை மறித்துப் பிடிக்க நான் விரும்பவில்லை. அப்படி அவளை 'வலை' வீசிப் பிடிக்க வேண்டுமென்பதல்ல என் எண்ணம். அவள் கூட அப்படிப் பட்டவளல்ல என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. இருவருமே மிக மிகக் கண்ணியமாகப் பழகினோம்! ஆனால்...? உள்ளத்திலே மட்டும் போர்! போர்!! தீராத மனப்போர்!!! மாரிகாலக் கடல் போல இரு உள்ளங்களும் குமுறிக் கொந்தளித்துக்கொண்டிருந்தன.

கிட்டத்தட்ட 10 அல்லது 12 வயது இளையவனான என்னுடன் பேசும்போது அவள் ஏன் 'தம்பி' என்றோ அல்லது ஆங்கில மொழியில் 'மிஸ்டர்' என்றோ அழைக்கப்படாது? 'நீங்கள்......' என்றுதான் அழைக்க வேண்டுமா? ஏன் நான்கூட 'அக்கா' என்று அவளை அழைத்தால் முத்து உதிர்ந்து விடுமா? இருவருமே அந்தத் தொடர்பை, விரும்பவில்லையா? போகட்டும்.

அவள் நன்றாக அளவளாவிக் கதைப்பதில் என்ன தவறு? கதைக்கவேண்டி ஏற்பட்டுவிட்டால் ஏன் அங்குமிங்கும் மிரள மிரள விழித்து எங்கள் சந்திப்பில் 'களங்கம்' விளைவிக்கிறாள்? மனதிலே மருண்டு கிடக்கும், மருட்சி எண்ணங்கள் திரையிடுகின்றனவா? நீரிலே அமிழ்த்திய ரப்பர்ப்பந்து போல அந்த எண்ணங்கள் வெளியே தெரியத்தான் தெரியுமா?

உள்ளூர்த் தியேட்டரில், உலகப்பிரசித்திபெற்றிருந்த காதல் காவியம் 'லைலா-மஜ்னு' முதல் காட்சி பார்த்துவிட்டுத்திரும்பிக் கொண்டிருந்தேன். நல்ல கலைப் பண்புடனும், கவர்ச்சி நுணுக்கத்துடனும் தயாரிக்கப்பட்ட அந்தப் படம் என்னை எங்கோ இன்ப உலகிற்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தது. கால்கள் நிலத்தில் பாவ வில்லை. வான வீதியில் பறந்து செல்வதாகவே பிரமை!

கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தேன். அந்தப் படத்தில் கேட்ட

"பிரேமைதான் பொல்லாதா? —
புவிமேல் ஏன் பொறுமை?"

என்ற இன்னிசை கானத்தை என் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தேன். அவள் வீடு தெரிந்தது. அறையில் பிரகாசித்த வெளிச்சம், ஜன்னல் கம்பிகளினூடே வெளியே பாய்ந்து கீற்றுக் கீற்றாக நிலத்தில் படிந்திருந்தது. அதன்மேல் ஒரு 'குழைவு சுந்தரி'யின் நிழலுருவம்!

ஆமாம்! அவள்தான். என் மனம், தறிகெட்ட கழுதை மாதிரி, துள்ளியோடியது. பார்வையை ஜன்னலோரம் தூதனுப்பினேன்.

'பிரேமைதான் பொல்லாதா?' என்ற என் முணுமுணுப்பு, நிச்சயம் அவளுக்குக் கேட்டிருக்கவேண்டும். அதனல்தான், அவள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்- என்னை மெல்லிய குரலிலே அழைக்க அவள் விரும்பினுள். உதடுகளைக் கூடக் குவித்து மறுபடியும் கலைத்துவிட்டாள். இது எனக்கு நன்ருகத் தெரிந்தது.

அவள் பெண். எவ்வளவு அனுபவமுள்ளவள், முட்டாள் போலத் திடீரென்று ஒன்றைச் செய்ய விரும்புவாளா? நான் ஜன்னலுக்கு நேரே நின்று அவளைப் பார்த்தபோது, அவளுக்குப் பெரிய அவமானம் ஏற்பட்டிருக்கும்!

"அறிவாளிகள் காலடி எடுத்துவைக்க அஞ்சும் இடத்தில், முட்டாள்கள் தைரியமாக நுழைந்து விடுகிருர்கள்" என்று யாரோ ஒருவன் எழுதி வைத்திருக்கிருன். அது என் விஷயத்தில் உண்மையாகி விட்டது. திடீரென்று அந்த ஜன்னலோரம் போய்க் "கூப்பிட்டீர்களா?" என்றேன்.

இதை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. திடுக்கிட்டுத் திரும்பினுள்.

"உம்.... இல்லை.... நான்... கூப்பிடவில்லையே!" என்று நிலை நிறுத்திச் சொன்னுள். ஆனல், அவள் வார்த்தை குளறிற்று. மிடற்றை முறித்து, எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

எனக்கு அவள் சொன்ன பதில் ஏமாற்றமும், வெட்கமுமாய்ப் போயிற்று. எவ்வளவு முட்டாள் நான் என்று என்னையே நொந்து கொண்டேன். ஆனல் அதற்கிடையில், "ஏன்

வெளியே நிற்கிறீர்கள்; உள்ளே வரலாமே!" என்று அழைப்பு விடுத்தாள்.

நான் யோசித்தேன்; இதற்கு என்ன அர்த்தம்? "அழைக்க வில்லையாம். ஆனல், உள்ளே வரட்டுமாம்."

நான் அடியெடுத்து வைத்ததைக் கண்டதும், திடீரென்று கதவண்டை ஓடிவந்து கதவைத் திறந்து எனக்காகக் காத்திருந்தாள். நான் உள்ளே நுழைந்தேன்.

கதவை மெல்லச் சாத்தித் தாழிட்டாள்!

"இப்படி இருங்கள்!" என்று ஒரு சோபாவைச் சுட்டிக்காட்டி விட்டு, அங்குமிங்கும் மிரட்சியுடன் பார்த்தாள். "யாராவது பார்த்து விடுவார்களோ" என்ற பயம் போலும்! பின், ஜன்னல் கதவுகளையும் சாத்திவிட்டு எனக்கு முன்பாக இருந்த சோபாவில் வந்து உட்கார்ந்தாள்.

அவள் கண்கள் மழைக்கால வானம் போலக் கறுத்துப் போதையேறிக் கிடந்தன. மின்சார ஒளியிலே அவள் அழகு அதிகமாகப் பரிணமித்தது. நிலவின் பாலொளியில் .செய்த சிலை போல அவளை மின்சார விளக்கு ஆக்கியிருந்தது. அவள் என் எதிரே யிருந்தாள். கட்டிக் கரும்பு! அப்படியே கடித்துத் தின்ன வேண்டுமென்று மனம் 'அடம்'பிடித்தது. இமை வெட்டாது அவளையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், அவள் அழகை அப்படியே 'அள்ளி அள்ளி'ப் பருகவேண்டும்... இப்படியே......

அவள் பார்த்து விட்டாள். ஏனே தெரியாது திடீரென்று குனிந்து கொண்டேன். அப்பப்ப! என்சாணுடலும் ஒரு சாணுய்க் குறுகிவிட்டது.

"வெளியே நல்ல நிலவு காய்கிறதோ?" என்று கேள்வி எழுப்பியவள் எழுந்து போய், ஜன்னலைத் திறந்து, வான வீதியை வாஞ்சையோடு நோக்கிஞள்.

"அப்படியானல் வெளியிலே போய்ப் பேசலாமோ?"

அவள் ஆமோதித்தாள்!

தோட்டத்தில் கிடந்த மணற் பரப்பில், நான் கையைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு சரிந்து படுத்திருந்தேன். எனக்குச் சற்று எதிரில் இரு கால்களையும் சரித்து மடக்கி உட்கார்ந்திருந்தாள் அவள்.

என்ன பேசுவது? இருவருமே திண்டாடினேம். காலம் மௌனத்தில் கரைந்து கொண்டிருந்தது. மணலில் விழுந்து பரவியிருந்த 'பன்னீர்' மலர்கள் நறுமணம் பரப்பி எங்களை உணர்விழக்கச் செய்தன. மௌனத்துக்குக் கரை கட்டினேன் நான்.

"உங்கள் கணவர் எங்கே?"

"இத்தனை நாளும் தெரியாதா?"

"எனக்கு யார் சொல்லப் போகிறர்கள்?"

"இல்லை! எப்படியாவது தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன்!"

"தெரிய வேண்டிய அவசியமென்ன ?" என்றேன் ஓரக்கண்களால் அவளைப் பார்த்துக் கொண்டே.

"எங்கோ வெகு தூரத்துக் கப்பால், இழவெடுத்த ஒரு ஊரில் டாக்டர்!" சலிப்புடன கூறிவிட்டு வானவீதியை அர்த்தமற்று நோக்கினாள்.

"நான் அவரைப் பார்த்ததில்லை. அதுதான் கேட்டேன்."

"ஆமாம். நீங்கள் அவரைப் பார்த்திருக்க முடியாது. வந்து மூன்று மாதந்தானே ஆகிறது. நீங்கள் வருவதற்கு முந்திய மாதம் போனார்...இனிமேல்..."

"எப்போ வருவார் ?"

"அடுத்த வருடம் அதே மாதத்தில்!" அவள் சொல்லி முடிப்பதற்குள் குரல் கம்மியது.

நான் அவள் முகத்தை நோக்கினேன். சந்திரன் முகிற் கூட்டத்திற்குள் ஒளிந்து கொண்டதனால் அவள் முகம் நன்றாகத் தெரியவில்லை.

ஆண்கள், பெண்களின் உடலுறுப்புகளை அணு அணுவாக ஆராய்ந்து, அவற்றின் தன்மைகளை, குண வேறுபாடுகளை உணர்ந்த டாக்டர்களே இப்படியென்றால், சாதாரணப் பாமர மக்கள் எம்மட்டு...? ஒரு பெண் எவ்வளவு காலம் தன் கணவனைப் பிரிந்து — அவன் தொடர்புகளற்று இருக்கமுடியும்? சந்திரன் வெளியே வந்தான். அவள் முகமும் நன்றாகத் தெரிந்தது.

"இது நியாயமல்ல—" என்றேன் நான்.

"எது ?"

"அதுதான் உங்கள் கணவர் உங்களை விட்டு அதிக நாட்கள் பிரிந்திருப்பது ?"

"யார் சரி என்றார்கள்?"

"அவர் உத்தியோகமும் அவரும்! சமூகத்திலே ஏன் தவறுகள் தளிர்க்கமாட்டா?" என்று சலித்துப் போய்க் கீழே குனிந்து பன்னீர் மலர்களுடன் விளையாடினேன். அவள் மணலில் தன் மலர்க் கரங்களைப் புதைத்து, சிப்பிகளையும் கிளிஞ்சல்களையும் தேடிக்கொண்டிருந்தாள்.

சில நிமிஷ அமைதிக்குப் பிறகு அவள் குரல் இலேசாக மிதந்தது.

"நான் ஒன்று கேட்கிறேன். நீங்கள் தவறாக நினைக்கக்கூடாது"

நான் கையை ஊன்றி எழுந்து, உட்கார்ந்துகொண்டு, அவளை ஆவலுடன் நோக்கினேன். அப்போதுதான் உதிர்ந்து விழுந்த ஒரு மலர் அவள் சிகையில் சிக்கிச் சிரித்தது. அவள் கண்கள் நிலவொளியில் மின் வெட்டின.

"என்னைப்போல, பொங்கி வரும் உணர்ச்சியலைகளை அடித்துக் கொன்றுவிட்டு, வெறும் உயிரற்ற பொம்மையாக அவர் இருப்பார் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?"

எனக்குத் தெரியும் அவள் யாரைக் குறிப்பிடுகிருள் என்று. தெரிந்தும் "யார்?" என்றேன்.

"அவர்தான், என் கணவர்!"

"எப்படிச் சொல்ல முடியும்? இன்றைய சமூக அமைப்பு அப்படியிருக்கிறது. அவர் உங்களுடனேயே இருந்துகொண்டும் கூட, இன்னொரு அழகியுடன் தொடர்பு கொண்டு சல்லாபித்தாலும் அதை எவருமே ஒரு பொருட்டாகக் கொள்ளமாட்டார்கள். வேண்டுமானல், அந்தச் செயலுக்குக் காரணமும் நீங்கள்தான் என்றும், சில நாக்கில் நரம்பற்றவர்கள் கூறலாம். அதைத் தவருகக்கூடக் கருதமாட்டார்கள். ஆனல் இன்றைய நிலையில் நீங்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்...சுருக்கமாகச் சொன்னல், தமிழகத்துப் பெண்கள் வெறும் பெட்டிப் பாம்புகள், கணவர்மார் அவர்களை யாட்டிவைக்கும் பாம்பாட்டிகள். பாம்பாட்டி எப்போதுமே ஆடலாம். பாம்பாட்டி விரும்பினல் தான் பாம்பு ஆடமுடியும்."

"அப்படியானல்..." என்று ஆர்ப்பரிக்கும் கடலலை போல், பெருமூச்சுக்கிடையே 'ஊங்' கொட்டினள். அவள் மார்பு விம்மித் தணிந்தது.

அப்படியானல்...இதன் முடிவென்ன?

'ஜில்'லென்று வீசிய குளிர் தென்றல் என் உடலை ஊசி போல் தாக்கியது.

"கூதலடிக்கிறது. உள்ளே போகலாம், வாருங்கள்!" என்ற அழைப்பைத் தொடர்ந்து, அவள் குளிர்க்கரங்கள் என் தோளை வருடின. கண்களை விழித்துக்கொண்டேன். நான் இருந்த வீட்டுக் குழந்தை, என் தோளைத் தட்டிக் கொண்டே "என்ன அண்ணு! இன்னும் விடியலையா?" என்றுன்.

'வெறும் கனவுதான இவ்வளவும்!' என்று பொருமிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

"என்னைக் கவர்ந்தது அவள் கவர்ச்சிமிக்க அழகு. ஆனல், அவளைக் கவர்ந்தது என் அழகல்ல—அவள் கணவனின் நீண்ட காலப் பிரிவு......

"எப்பொழுதுமே ஒரு இளைஞன் ஒரு அழகியைக் கண்டு காமுறுகிருன்! அவள் அழகு அவனைக் கவர்ந்துவிடும். அவள் கூட அவன் அழகில் மயங்கிவிடலாம். ஆனல் கலியாணமான எந்த ஒரு பெண்ணையும், ஒரு இளைஞன் கவர்ந்து விட்டான் என்ருல், மற்ற எந்தக் காரணங்களையும் விட முதற் காரணம், அவள் கணவனுடைய வெகு

காலப் பிரிவாகத்தான் இருக்கும்.''

○

"நிழலருமை வெய்யிலிலே... நிழல் எங்குமே இருக்கிறது; எப்பொழுதும் இருக்கிறது. ஒரு நாள் பொழுதில் நிழல்தான் அதிகம். என்றாலும், தகிக்கும் வெய்யில் தகதக என்று எரித்துக் கொண்டிருக்கும்போது, அதில் அகப்பட்டவனுக்கு ஒரு சிறு நிழல் மட்டும் கிடைத்தால்? அப்போதுதான் நிழலின் பெறுமதி தெரிகிறது. நீர் பூமியின் முக்கால்வாசிப் பாகத்தை மூடியிருந்தாலும் பாலைவனத்தில் கிடைக்கும் ஒரு துளி நீருக்கு ஈடாகுமா?........''

கல்லூரியில் கற்ற இந்த விமர்சனத்தைத் திருப்பி மீட்ட போது, எனக்கு வில்வியின் நினைவு வந்தது. அவளுக்கும் இதற்கும் என்ன தொடர்பு?

"இளம் பெண்கள் எல்லோருமே பருவத்தின் ஆட்சியிலிருக்கும்போது அழகாக, கவர்ச்சியாக, எடுப்பாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் நான்கு பிள்ளைகளையும் பெற்று, 'காடு அழைக்கிறது' என்று சொல்லிக்கொள்கிற காலத்தில், ஒருத்தி அழகாக இருந்தால், ஏன் அவள் கவர்ச்சியாக இருக்கமாட்டாள்? அந்த அழகுக்குத்தானே பெறுமானம் அதிகம்...! இளமைக் காலத்தில் அழகுதான் அதிகம். ஆனால் முதிர்ந்த காலத்தில்...? காட்டிலும், வீட்டிலும், சோலையிலும் எங்குமே நிழல். ஆனால்

வெய்யில் காலத்தில்...? அது போல முக்கால் பூமியிலுமே நீர்தான். ஆனால் பாலைவனத்தில்—?......

என் கல்லூரியில் என் வகுப்பிலேயே பல மாணவிகள் அழகும், அவலட்சணமும் உள்ளவர்கள்தான். குணமும், குறும்பும் இருக்கத்தான் செய்யும்... அப்படிப்பட்ட ஒரு மாணவி கூடக் கவரமுடியாத என் உள்ளத்தை இந்த வில்வி மட்டும் கவர்ந்ததற்கு இந்தக் காரணந்தான் உண்மையோ......?

"ஒரு கதை!'' என்று சத்தம் கேட்டது. சிந்தித்துக் கொண்டே நடந்து கொண்

டிருந்த நான் திரும்பிப் பார்த்தேன்.

லில்லியின் வீடு! மறைவுக்ாகக் கட்டியிருந்த பிரப்பம் பாயின் ஒளிக் கீற்றுகளுக்கப்பால் அவள் மதிமுகம் தெரிந்தது. அப்போது மணி நான்கு இருக்கும்.

"நாங்கள் இன்று போகிறோம். வழியனுப்ப ரயிலடிக்கு வருகிறீர்களா?" என்றாள் தாங்காத வேதனையுடன்! நான் எங்கே யென்று கேட்கவில்லை. ஆனால், எங்கேயென்று ஊகித்துக்கொண்டேன்.

"சரி!" என்று சொல்லி முடித்தபோது 'ஐயோ' என்றலறலாமா என்றிருந்தது எனக்கு.

இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில் அவளும், அவள் குழந்தைகளும் ஏறியிருந்தனர். அவளுக்கெதிர்த்த 'ஸீட்'டில் அவள் மகன் இருந்தான். அவன் முகம் கலகலப்பாகக் காட்சி தந்தது. 'இன்றோ நாளையோ' என்றிருக்கும் அவன் தங்கை, வயதுக்கே உரிமையான நாணம் கலந்த கண்களுடன் 'புள்ளி மான் பார்வை' பார்த்தாள். சிறுவர்கள், பிரயாண மகிழ்ச்சியில் 'தலைகால் தெரியாமல்' ஆடிக்கொண்டிருந்தார்கள்.

நான் முதன் முதலில் சந்தித்தேனே, அந்தப் போதைதரும் நீலச் சேலையையும், சிவப்பு ஜாக்கெட்டையும் தான் அவள் அணிந்திருந்தாள். அந்தச் சேலையிலேதான் தன் அழகு நன்றாய்ச் சோபிக்கிறது என்று அவள் எப்படியோ உணர்ந்திருந்தாள் போலும்! அதுதான் என்னை மகிழ்விக்க வேண்டும் என்று கருதி அந்த உடைகளை அணிந்திருந்தாள்.

கோடிட்ட துணியைத் துண்டு துண்டாக வெட்டிப் பின் எப்படி எப்படி யெல்லாமோ அழகாகப் பொருத்தி, வர்ணஜாலம் புரிந்து, தைக்கப்பட்டிருந்த அவள் மகனின் சட்டைகூட இந்த நீலத் தாவணிக்கும் சிவப்பு ஜாக்கெட்டுக்கும் தோற்றுவிட்டது.

ரயில் புறப்படுவதற்கு இன்னும் இரண்டு நிமிஷங்கள் மட்டும் இருந்தன. குமிழிடும் உணர்ச்சி வெள்ளம் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்துவிட்டு, "நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம்; போய்ச் சேர்ந்ததும், கடிதம் எழுதுகிறேன்!" என்றாள் என் லில்லி.

"மிஸ்டர் டேவிட், போய் வருகிறோம்" என்றான் மகன். அவன் தங்கை, ஒருமுறை 'பார்த்து' விடை பெற்றுக் குனிந்துகொண்டாள்.

என் கைப்பையில் கிடந்த ஒரு நூலை எடுத்து லில்லியின் கையில் கொடுத்து, "இதை என் நினைவுக்காகத் தரவில்லை! பிரயாண நேரத்தில் படிப்பதற்காக!" என்றேன். அத்துடன் ஒரு சிறு கடுதாசிப் பொட்டலத்தையும் அவள் கையில் கொடுத்தேன். அதை அவள் வாங்கும்போது அவள் கரங்கள் என் கரங்களுடன்—இல்லை என் கரங்கள்

அவள் கரங்களுடன் ஒருமுறை உறவாடின. அந்த மின்சாரத் தாக்குதலில் அவள் கண்கள் என்னைப் பரிதாபத்துடன் நோக்கின; "வேண்டாம்! கடைசி நேரத்தில் தவறுவதா?" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டன. நான் நிலைமையைச் சமாளித்தேன்.

"இது உங்களுக்குப் பிடித்தமான பீடா! அதாவது லிப்ஸ்டிக்!" என்றேன் நகைச் சுவை ததும்ப. பீடாவை வாங்கி மடியில் வைத்துவிட்டு, நான் கொடுத்த நூலை எடுத்துப் பிரித்தாள்.

அடடா! அழகு சிரித்தது! அந்தப்புத்தகம் கவியரசர் பாரதிதாசன் தமிழ் மக்களுக்குத் தந்த 'அழகின் சிரிப்பு.'

கொந்தளிக்கும் உள்ளங்களின் பிரதிபலிப்பாக ரயில் வண்டி 'ஓ!' வென்று அவலக் குரலில் அலறிவிட்டு விடை பெற்றுக்கொண்டது. கைகளை உயர்த்தி ஆட்டி, அவர்களை வழியனுப்பி வண்டி போன திசையையே பார்த்துக்கொண்டு நின்றேன். வெகுநேரம் வரை அப்படியே பிரமை பிடித்தவன் போல் நின்றுவிட்டு, உயிரற்ற வெறும் சடலத்தை என் இருக்கை நோக்கி நகர்த்தினேன். வீட்டில் நுழையும்போது, அந்த வீட்டு அம்மாள் என் கையில் ஒரு தந்தியை நீட்டினாள்.

"உனக்கு ஒரு வேலை தேடி வைத்திருக்கிறேன். உடனே புறப்பட்டு வரவும்

அப்பா"

பிரயாண அலுவல்களை விரைந்து முடித்துக்கொண்டு, மறுநாள் அதே நேரம் 2-ம் வகுப்பு ரயில் வண்டியில் ஏறிக்கொண்டேன். கடந்து போன இன்ப வேதனைகலந்த நினைவுகள் எல்லாம், ஓடிக்கொண்டிருக்கும் புகை வண்டித் தொடர் போல ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி மனதில் ஊசலெடுக்கத் தொடங்கின. அதற்கு ஒத்தாசை புரிந்து, என் உள்ளத்தைக் கிறுக்க வைத்தனர், அங்கு நடமாடித் திரிந்த நீலச் சேலைக்காரிகள்!

"இந்தத் தந்தி சற்று முன்னர் வந்திருந்தால் நானும் அவளுடன் போயிருப்பேனே" மனம் குமுறியது. ஆனால் கட்டாயம் பிரிந்தேயாகவேண்டுமென்று எண்ணவில்லை.

வண்டி ஊதிக்கொண்டே நகர்ந்தது. மெதுவாக ஓடிப் பின் வேகமாக, மிக வேகமாக ஓடியது; தலை தெறிக்க ஓடியது! மனதிலே ஒரு நப்பாசை; "அவளைப் பிடித்துவிட்டால்...?"

முடியுமா? எனக்கும் அவளுக்கும்தான் இன்று எத்தனை தூரம்? என்னை விட்டு அவள் எவ்வளவோ முந்திவிட்டாள்! இல்லையா?

பணியாளா நீ?

சி. திருநாவுக்கரசு

பொய்யரின் ஆட்சியிலே மலர்ச்சி காணுப்
போதுமக்கள் நெஞ்சம்போல் பரந்தி ருக்கும்
மையிருட்டில் பெருமழையின் வரவால், வெப்பம்
மாய்ந்தொழியக் குளிரேந்தி உலவும் காற்றே!
'நொய்மைமலர் மேனியாளை மணந்து கொள்ளும்
நோக்கமெனக் கில்லை'எனும் உறுதி தன்னைக்
கொய்தொழிக்கும் குமரிக்குப் பணியா ளாநீ?
குளிர்வாளால் எனைநீஏன் வாட்டு கின்றாய்?

சிலைநிகர்த்த இளம்பெண்டிர் இன்ப மல்லால்
சிந்தனையில் வேறெதுவும் கொள்ளா மன்னன்
உலைநெருப்பாய் உள்ளமக்கள் மூண்ட விக்கும்
உள்ளநிலை போன்றிருளும் மழையும் சூழ
அலையலையாய் வீசுகின்ற காற்றே! 'வாழ்வில்
அவளெதற்காம்?' எனும்நினைவைத் தகர்த்த ழித்துக்
கொலைசெய்யும் வேல்விழிக்குப் பணியா ளாநீ?
குளிர்வேலால் எனைநீஏன் வாட்டு கின்றாய்?



'ஏன்?'என்ற கேள்விதனை நாட்டு மக்கள்
எழுப்பிவிடின் கலக்கமுறும் வஞ்சர் நெஞ்சாய்
வான்எங்கும் இருள்பரவப் பெரும ழையின்
வரவாலே குளிர்பரவப் பாயும் காற்றே!
'நான்இவளை மணந்துகொளல் இல்லை' என்று
நவின்றிட்ட தவறினுக்கு வருந்து கின்ற
தேன்இதழாள் தனக்கென்ன பணியா ளாநீ?
குளிர்த்தீயால் எனைநீஏன் வாட்டு கின்றாய்?

சிறுவர் அரங்கம் பொன்னி

சர்க்கஸ் ரங்கு

டி. ஜே. இன்பராஜ்

[ரங்கு ஏழைப் பையன். அதனால் அவன் பள்ளிக்கூடத்தில் படிக்க முடியவில்லை. அவனுடைய அம்மா வடை சுடுவாள். அவற்றைப் பட்டணத்தில் கொண்டுபோய் ரங்கு விற்று வருவான். ஒரு நாள் பட்டணத்தில் சர்க்கஸ் நடந்தது. ரங்கு சர்க்கஸ் பார்க்கச் சென்றான். சர்க்கஸ் நடந்துகொண்டிருக்கும்பொழுது, ஒரு புலி கூட்டிலிருந்து வெளியே வந்துவிட்டது. கூட்டத்தில் ஏற்பட்ட பரபரப்பில் ரங்கு மூர்ச்சையாகிவிட்டான். சர்க்கஸ் மானேஜர் அவனைக் காப்பாற்றித் தனது சர்க்கஸ் கம்பெனியில் சேர்த்துக்கொண்டார். பிறகு....]

4

ஏழு வருடங்கள் ஓடி மறைந்தன, அன்று பட்டணத்தில் காந்தி மைதானத்தில் 'ஜே ஜே' என்று ஒரே கூட்டமாயிருந்தது. எட்டு வருடங்களுக்குப் பிறகு 'கோபால் சர்க்கஸ்' மறுமுறையாக அந்த ஊருக்கு வந்ததுதான் காரணம். மேலும் சர்க்கஸ் சாம்பியன் ரங்கநாதனைப்பற்றிப் பட்டணமெங்கும் ஒரே பேச்சாயிருந்தது. ரங்கநாதனுடைய அபூர்வமான பார் வேலைகளைக் கண்டு அவனைப் புகழாத மக்கள் இல்லை. ஒவ்வொரு நாளும் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று சர்க்கஸ் பார்த்தனர்.

இரவு ஏழு மணி. சர்க்கஸ் ஆரம்பமாகிப் பல வேலைகள் நடந்து கொண்டிருந்தன. இடையில் ஒரு மணி அடித்தது. சர்க்கஸ் மானேஜர் விளையாட்டு அரங்கத்திற்கு வந்தார்.

"இப்பொழுது நமது சர்க்கஸ் சாம்பியன் ரங்கநாதன் பலஅபூர்வமான பார் வேலைகளைச் செய்து காண்பிப்பார்" என்று அவர் கூறினார். மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

ரங்கு மக்களுக்கு முன்னால் வந்து நின்றான். அவனைப் பார்த்தவுடன் ஆரவாரம் அதிகப்பட்டது. உடலைப் பிடித்தாற்போல் ஒரு கருப்பு பனியனையும், வெள்ளை நிறக் கால் சட்டையையும் அவன் அணிந்திருந்தான். கால்களில் கருப்பு பூட்ஸ்களை மாட்டியிருந்தான். இதுவரையில் அவன் பரிசாகப் பெற்ற வெள்ளி மெடல்களும், தங்க மெடல்களும் பனியனில் குத்தப்பட்டிருந்தன. மின்சார விளக்குகளின் ஒளி பட்டு அவை "தக தக"வென்று பிரகாசித்தன.



ரங்கு கரங்களைக் குவித்து மக்களை வணங்கினான். பிறகு ஒரு கரணம் அடித்தான். நூலேணியின் மூலமாகப் பாருக்கு ஏறிச்சென்றான்.

பலவிதமான பார் வேலைகளை அவன் செய்தான். பாரில் நின்றுகொண்டு ஆடினான். உட்கார்ந்துகொண்டு ஆடினான். பாரைக்கைகளால் பிடித்துக்கொண்டு தொங்கி ஆடினான். பிறகு கைகளைவிட்டு, கால்களால் பிடித்துக்கொண்டு ஆடினான்.

கடைசியில் 'முப்பார் வேலைகள்' ஆரம்பமாயின. ஒன்றன் பின் ஒன்றாக மூன்று பார்கள் தொங்கின. முதல் பாரில் சிறிது நேரம் ஆடிவிட்டு, இரண்டாவது பாரைப் பிடித்து, கடைசிப் பாருக்குச் செல்லவேண்டும். இந்த வேலையைத் தைரியத்துடனும் சுறுசுறுப்புடனும் செய்யாவிட்டால் கீழே விழ நேரிடும். இது ஒரு பயங்கரமான விளையாட்டாகும்.

ரங்கு, முதல் பாரில் ஆடிக்கொண்டிருந்தான். சர்க்கஸ் பார்க்கும் கூட்டத்தில் சத்தமில்லை. எல்லோரும் திறந்த வாயை மூடாமல் அடுத்த நிகழ்ச்சியைக் காண ஆவலோடிருந்தனர். ரங்கு முதல் பாரில் ஆடிக்கொண்டே, இரண்டாவது பாரைப் பிடிக்கக் கைகளை நீட்டினான்.

"படீர்" என்றொரு பெரிய சத்தம்.முதல் பார் அறுந்து கீழே விழுந்தது. சர்க்கஸ் பார்க்கும் கும்பலிலிருந்து "ஐயோ, போய் விட்டானே!" என்றொரு சத்தமும் கேட்டது. ஒரு அம்மாள் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தாள்.

நல்ல வேளையாக ரங்கு இரண்டாவது பாரைச் சட்டென்று பிடித்துக்கொண்டான். ஒரு விநாடி தாமதித்திருந்தால் அவன் பாருடன் கீழே விழுந்திருப்பான். பாரைக் கட்டும் கயிறு தேய்ந்திருந்ததால் பார் அறுந்துவிட்டது. அவன் தப்பித்துக்கொண்டதைப் பார்த்தவுடன் மக்கள் ஆரவாரம் செய்தனர். ரங்கு தொடர்ந்து பார் வேலைகளைச் செய்து மக்களை மகிழ்வித்தான்.

சர்க்கஸ் கூடாரத்தில் மூர்ச்சித்து விழுந்த அம்மாளை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

பொழுது விடிந்தது. ரங்கு தன்னுடைய கூடாரத்தில் உடற் பயிற்சி செய்துகொண்டிருந்தான். அவனை மானேஜர் கூப்பிடுவதாக ஒருவன் வந்து சொன்னான். ரங்கு மானேஜரிடம் சென்றான்.

"ரங்கநாதன், நேற்று நீ பாரில் ஆடிக்கொண்டிருக்கும்பொழுது பார் அறுந்துவிட்டதல்லவா? அப்பொழுது ஒரு வயதான அம்மாள் அதைப் பார்த்து மூர்ச்சையாகிவிட்டாள். உன்மேல் அவளுக்கு என்ன பாசமோ தெரியவில்லை. அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். நீ அங்கு போய் அவளுக்கு ஆறுதல் சொல்லி விட்டு வா" என்று சர்க்கஸ் மானேஜர் ரங்குவிடம் சொன்னார்.

ரங்கு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான்.

ஆஸ்பத்திரியின் உள் அறையில் வரிசையாகப் போடப்பட்டிருந்த கட்டில்களில் நோயாளிகள் படுத்திருந்தனர். ரங்கு அங்கிருக்கும் விசாரணைக்காரரிடம் அந்த அம்மாளைப்பற்றி விசாரித்தான். அவர் அந்த அம்மாள் படுத்திருக்கும் கட்டிலை அவனுக்குக் காண்பித்தார். ரங்கு அங்கு சென்றான்.

அந்த அம்மாளுக்கு அன்றிரவே மூர்ச்சை தெளிந்துவிட்டது. ரங்கு அங்கு வரும்பொழுது அந்த அம்மாள் விழித்துக்கொண்டுதான் இருந்தாள். அவள் ரங்குவைப் பார்த்தவுடன் "தம்பீ, உனக்கு அடிபடவில்லையே" என்று களிப்புடன் கூவினாள்.

முதல் பார் அறுந்தவுடன் அடுத்த பாரைப் பிடித்துக்கொண்டதாக அவன் அந்த அம்மாளிடம் சொல்லிவிட்டு, "உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான்.

"இப்பொழுது பரவாயில்லை" என்று அந்த அம்மாள் சொன்னாள். ரங்கு கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு தலையை அன்புடன் தடவிக் கொடுத்தான். அந்த அம்மாள் ரங்குவினுடைய இரண்டு கைகளையும் வாஞ்சையுடன் பிடித்துக்கொண்டாள். மறுகணம் "ரங்கு!" என்று ஆச்சரியத்துடன் கத்தினாள்.



"நீங்கள் யார்?" என்று ரங்கு வியப்புடன் அவளைக் கேட்டான்.

"என்னைத் தெரியவில்லையாடா? நான்தான் உன் அம்மா!" என்று அவள் சொன்னாள்.

ரங்கு "அம்மா!" என்று அவளை ஆர்வத்துடன் அணைத்துக் கொண்டான்.

"எப்படியம்மா என்னை அடையாளம் கண்டுகொண்டாய்?" என்று ரங்கு அவன் அம்மாவிடம் கேட்டான்.

"உன்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்ட பொழுதுதான் ஒரு கையில் தழும்பு இருப்பது தெரிந்தது. தழும்பைப் பார்த்தவுடன் தெரிந்துகொண்டேன்" என்றாள்.

ரங்கு பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்தான்.

......வடைச் சட்டியில் கையை விட்டது—பெரிய தழும்பு—சர்க்கஸ் பார்த்தது—தலையில் காயம்—சர்க்கஸ் சாம்பியன்—பார் அறுந்தது—அம்மாவைக் கண்டது......

"ரங்கு!" என்று அவன் அம்மா கூப்பிடுவதைக் கேட்டவுடன் அவனுடைய நினைவு மீண்டும் திரும்பியது.

"என்னம்மா வேண்டும்?" என்று அவன் அன்புடன் கேட்டான்.

"நீ எப்படிச் சர்க்கஸில் சேர்ந்தாய்?"

ரங்கு எல்லாச் சம்பவங்களையும் முதலிலிருந்து சொன்னான். அதை முழுவதும் கேட்ட அவனுடைய அம்மா, "என் கண்ணே, நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாய்?" என்று சொன்னாள்.



"நீ எப்பொழுது அம்மா பட்டணத்திற்கு வந்தாய்? நம்முடைய கிராமம் எப்படியிருக்கிறது?" என்று ரங்கு கேட்டான்.

ரங்குவின் அம்மா பெருமூச்சு விட்டாள்.

"ரங்கு, நீ கிராமத்திலிருந்து வந்தவுடன் உனக்காக இரண்டு நாள் வரையில் காத்திருந்தேன். நீ வராததால் உன்னைத் தேடிக்கொண்டு பட்டணத்திற்கு வந்தேன். சாப்பிடாமலே மூன்று நாட்

கள் உன்னை இங்கு தேடினேன். உன்னைத் தேடிக்கொண்டு வந்த பொழுது பசி மயக்கத்தினால் கீழே விழுந்துவிட்டேன். உடனே என்னை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு உடம்பு குணமாகி வெளியே வந்தேன். இந்தப் பட்டணத்திலிருந்தால் எப்படியும் உன்னை பார்த்துவிடலாம் என்ற எண்ணத்தினால் இங்குள்ள ஒரு பெரிய ஹோட்டலில் மாவரைத்துக் கொடுக்கும் வேலையில் சேர்ந்தேன். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு உன்னை மறுபடியும் பார்க்கிறேன்'' என்று ரங்குவின் அம்மா சொன்னாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல் வந்தது.

ரங்குவினால் துக்கத்தை அடக்க முடியவில்லை. "அம்மா, நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாய்! என்னால்தானே உனக்கு இத்தனை துன்பம்?'' என்று சொல்லித் தேம்பி அழுதான்.

○

'கோபால் சர்க்கஸ்' கம்பெனியைக் கலைத்துவிட்டார்கள். வட இந்தியாவுக்குச் சென்று வந்ததில் சர்க்கஸ் கம்பெனி முதலாளிக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. அந்தப் பணம் போதும் என்ற திருப்தியுடன், அவர் வேலையாட்கள் ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

சர்க்கஸ் கம்பெனி முதலாளி தமக்குக் கிடைத்த வருமானத்திற்குக் காரணம் ரங்கு என்பதை உணர்ந்திருந்தார். அதனால் அவர் அவனுக்கு ஒரு பெரிய தொகையை இனாமாகக் கொடுத்தார். ரங்கு, முதலாளியை வாழ்த்திவிட்டுப் பணத்தைப் பெற்றுச் சென்றான்.

இப்பொழுதெல்லாம் ரங்குவைப் பார்க்கவேண்டுமானால் பட்டணத்திலுள்ள பெரிய தெருவுக்குச் செல்லவேண்டும். அங்கு 'ரங்கு விலாஸ் காப்பி ஹோட்டல்' என்ற பெயர்ப் பலகையுடன் ஒரு மூன்று மாடிக் கட்டிடம் இருக்கிறதே, அதில்தான் ரங்கு இருக்கிறான்.

ரங்குவும் அவன் அம்மாவும் மிகவும் களிப்புடன் இருக்கின்றனர். சர்க்கஸ் கம்பெனி முதலாளி கொடுத்த பணத்தைக் கொண்டு ரங்கு ஹோட்டலை நடத்துகிறான். பண்டங்கள் சுத்தமாகவும், ருசியாகவும் செய்யப்படுவதால் அங்கு நல்ல விற்பனை. எப்பொழுதாவது நீங்கள் பட்டணத்திற்குச் சென்றால் அந்த ஹோட்டலில் சாப்பிட்டுப் பாருங்கள்; "பலே ஜோர்!'' என்று சொல்லுவீர்கள்!

[முற்றும்]

கொலைகாரன்

வாணிதாசன்

"அவன் பைத்தியம். முழுப் பைத்தியம், பைத்தியத்தின் காரணமாகவே அவர்களைக் கொலை செய்தான்" என்று வாதாடிக் கொண்டிருந்தார் வழக்கறிஞர்.

உண்மை புரியாதபோது, காரணத்தைக் கண்டறிய முடியாத போது, அறிவாளிகள் என்று தங்களைக் கருதிக் கொள்ளுகின்ற ஒரு சிலர் கையாளும் சொல் இந்தப் "பைத்தியம்."

என்றைக்கும் இல்லாத கும்பல் அன்று கூடிவிட்டது. வழக்கறி மன்றமா அல்லது தலைக்காடா என்று ஐயுறவேண்டிய நிலையில் காட்சியளித்தது வழக்கறி மன்றம்.

இது ஒரு புதுமையான கொலை. புதுமையானது மட்டுமல்ல, புரியாததுங் கூட. கொலையுண்டவர் இருவரும் ஆளனும் மனைவியும் செல்வந்தர்கள். சேன்நதியில் கலக்கும் ஷத்து ஆற்றுக்கருகில் நாணற் காட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது அவர்கள் உடல். நாடறிந்த செல்வந்தர்கள்-அந்த அம்மாள் கைம்பெண்ணாக இருந்து கடந்த ஆண்டு தான் அவரைத் திருமணம் செய்து கொண்டாள். நல்ல அழகு—காவியத்திற்கும் ஓவியத்திற்கும் நல்ல எடுத்துக்காட்டு என்று பலர் அவளைப் பற்றிப் பேசியதுண்டு—அவர் மட்டும் என்ன! இளமை ததும்பும் எழிலுடையவராக எப்போதும் நகைத்துப் பேசும் முகமுடையவராகவே இருந்தார்.

அவர்களுக்கு யாரும் பகை இல்லை. அந்தச் சுற்று வட்டாரத்தில் அவர்களுக்கு நல்ல மதிப்பு. அவர்களைக் கொலை செய்தவன் பொருளுக்காக ஆசைப்பட்டுக் கொன்றான் என்று நினைப்பதற்குக் கூட இடமில்லை. அவர்கள் அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகள் யாவும் அப்படியே இருந்தன.

அவர்களை ஒருவர் பின் ஒருவராகக் குத்திக் கொலைசெய்து ஆற்றில் எறிந்திருக்க வேண்டுமென்று எண்ண முடிந்ததே தவிர, கொலையைப்பற்றி வேறொன்றும் விளங்கவில்லை; விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை.

படகோட்டிகள், அக்கம் பக்கத்தில் வாழ்பவர், ஐயப்பட்ட ஒரு சிலர் இப்படிப் பலரைப் பலவகையான வழிகளிலே நயத்தாலும் பயத்தாலும் கேட்டுப் பார்த்துப் போலீஸ் சலித்துவிட்டது.

இந்தக் கொலையைப் பற்றி இனி விசாரித்துப் பயனில்லை—கைவிட வேண்டியதுதான் என்று முடிவுக்குப் போலீஸ் வந்தபோதுதான், ஜாய்ஜோர்ஜ் என்பவன் கைதியாக்கப்பட்-

டான். அதுவும் அவனாகவே வந்து "கொலை செய்தவன் நான் தான்" என்று ஏற்றுக்கொண்டான். குற்றமற்றவன் போலீஸ் கொடுமைக்கு ஆட்படக் கூடாது என்ற சிறந்த எண்ணத்தாலோ என்னவோ, "நான்தான் அவர்களைக் கொன்றேன்" என்று அவனே ஏற்றுக் கொண்டான்.

அவனைக் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் அவன் சொன்னது இதுதான்:

"அந்தச் செல்வந்தரை இரண்டு ஆண்டுகளாகத் தெரியும்—அந்த அம்மாளை ஆறு மாதங்களாகத் தெரியும். அவர்கள் அடிக்கடி என்னிடம் வருவார்கள். பழைய மரச் சாமான்களைப் பழுது பார்த்துக் கொடுக்கச் சொல்வார்கள்-அதிகமாகவே கூலி கொடுப்பார்கள். எனக்குரிய கூலி போக மிகுதியை அவர்களிடம் திருப்பிக் கொடுக்கும் போது 'இல்லை தம்பி! நீ சிறந்த வேலைக்காரனாக இருக்கிறாய்—உனக்கல்ல இந்த அதிகத் தொகை; உன் தொழிலின் சிறப்பிற்காகத் தருகின்ற பரிசு' என்று சொல்லிக் கொடுத்து விட்டுத்தான் போவார்கள்."

இதையே மீண்டும் மீண்டும் சொன்னானே ஒழிய வேறெதையும் சொல்ல மறுத்துவிட்டான் அவன்.

"சரி, அவ்வளவு நல்லவர்களை நீயேன் கொலை செய்தாய்?" என்று அவனைக் கேட்டபோது, "அவர்களைக் கொல்லவேண்டும் போல் தோன்றியது. கொன்றேன்"—இதைத்தான் அவன் பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்—வேறொன்றும் அவன் வாயினின்று பிடுங்க முடியவில்லை.

○

அவன் ஒரு அனாதை-அவனை அவ்வூரில் ஒரு குடியானவன் மனைவி வளர்த்து வந்தாள்-அவனுக்காக யாரோ மாதா மாதம் பணம் அனுப்பி வந்தார்களாம்-பணம் வருவது நின்றுவிடவே அவள் அவனைப் பாதுகாக்க முடியாது எனக் கைவிட்டு விட்டாள். அவன் எப்படியோ காட்டுச் செடிகளைப் போல வளர்ந்தான். அவனுக்குரிய "லுய் மோர்ழ்" என்ற பெயரை விட்டு "பிரபு, பிரபு!" என்று அவ்வூர் மக்கள் அழைப்பதுண்டு. அவன் இயற்கையிலேயே நுண்ணறிவும், பெருந்தன்மையும், வேலையிலே பற்றுதலும் உள்ளவனாக இருந்தான். மற்ற அவன் சோட்டுப் பிள்ளைகளுக்கு இல்லாத இத்தகைய குணங்களைக் கண்டு தானோ அல்லது கிண்டலுக்காகவோ அவனை எல்லோரும் "பிரபு, பிரபு" என்று அழைத்து வந்தார்கள்.

அவன் தன் பிழைப்புக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட தச்சுத் தொழிலில் சிறந்து விளங்கினான். எங்கிருந்தும் சிற்றுளி வேலைகள் அவனைத் தேடிவரும். அவன் ஒரு பொதுவுடமைக் கட்சிக்காரன் என்று கூட அவனைப்பற்றிக் கூறியதுண்டு-உழவர்கள், தொழிலாளர்கள் கூட்டத்தில் பல தடவை பேசியிருக்

கிருன் - பெரிய பேச்சாளிபோல நன்ருகப் பேசுவான் - அடிக்கடி நாவல்கள் படிப்பான் - அதிலும் கொலை சம்பந்தமான நாவல்தான் அவனுக்குப் பிடிக்கும்.

இவ்வளவே அவனைப்பற்றி விசாரித்ததில் தெரிந்து கொள்ள முடிந்தது.

மீண்டும் வழக்கறிஞர் அவன் "பைத்தியம்" என்ற பல்லவியையே பாடிக்கொண்டிருந்தார். இல்லையென்ருல் அடிக்கடி அவனுக்கு வேலை கொடுத்த சிமோனை, இரண்டு ஆண்டுகளாக அறிமுகமான சிமோனை. தயாள குணமுள்ள சிமோனை, அவனுக்கு மூவாயிரம் பிரான் வரையில் கூலி கொடுத்த சிமோனைக் கொன்றிருப்பானு? அவன் முழுப் "பைத்தியம்" என்பதே அவர் கண்டுபிடிப்பு — அதையே மீண்டும் மீண்டும் அவர் வற்புறுத்திக் கொண்டிருந்தார்.


அங்குக் கூடியிருந்த அத்தனை பேர் உதடுகளின் அசைவும் அவன் பைத்தியம் என்று முடிவுக்கு வந்ததை விளக்கின.



நீதிபதி கைதியைப் பார்த்து வழக்கம்போல் "நீ இன்னும் ஏதாவது கூற வேண்டியதுண்டா?" என்று கேட்டார்.

அவன் தலை நிமிர்ந்தான் - நடுத்தரமான உடல், உடலை அழகு செய்யும் தலை - சிறிது நீலம் கலந்த விழிகள் - அந்த விழிகள் அவன் கள்ளமோ, கபடமோ அறியாதவன் என்பதை உணர்த்திக் கொண்டிருந்தன. உண்மை நிறைந்த அவன் குரல் கணீரென்று ஒலித்தது. அங்குக் கூடியிருந்த, பைத்தியமென்று நினைத்துக் கொண்டிருந்த அத்தனை பேர் மனதையும் நொடியில் மாற்றிவிட்டது அந்த வெண்கலக் குரல்.

அவன் சற்று நிதானமாகக் குரலை உயர்த்தியே பேசினான். அவன் வாயிலிருந்து வெளிக் கிளம்பிய ஒவ்வொரு சொல்லும் அறமன்ற மூலைமுடுக்குகளில் எல்லாம் அழுத்தம் திருத்தமாகவே கேட்டது.



"நீதிபதியவர்களே! என்னை வேண்டுமானால் தூக்கிலிடுங்கள். அதை நான் மனமார ஏற்றுக் கொள்ளுகிறேன். வழக்கறிஞர் கூறுவதைப் போல் நான் பைத்தியமல்ல. யாவும் கூறிவிடுகிறேன் - சற்றுக் கேளுங்கள். கேட்ட பிறகு உங்கள் விருப்பம்போல் தீர்ப்புச்செய்யுங்கள்.

"ஒரு பெண் திருட்டுத்தனமாக ஆண் மகவை ஈன்று ஊர் பேர் தெரியாத ஒருத்தியிடம் கொடுத்து வளர்க்கச் செய்

கிறள் - மாதா மாதம் சிறு தொகை கொடுத்து வந்தாள். அக்குழந்தை, குற்றமற்ற அக்குழந்தை, வறுமைக்கு ஆளாக்கப்பட்ட அக்குழந்தை, களவொழுக்கக் கேட்டால் பிறந்து சாவைவிட கொடுமையான பழிச் சொல்லை ஏற்றுக்கொண்ட அக்குழந்தை எங்கு எப்படி வளர்ந்தது என்பதை அவள் அறிவாளா? அதுமட்டுமல்ல, பணம் கொடுத்து வந்ததையும் நிறுத்திக் கொண்டாள் அப்பாதகி - ஏழை எத்தனை நாளைக்கு, எவளோ ஒருத்தியின் பிள்ளையை வளர்க்க முடியும்! திங்கள் தோறும் வருகின்ற சிறு தொகை வாாதுபோகவே வளர்த்தவள் கைவிட்டுவிட்டாள் கருத்தறியாத அந்தச் சிசுவை - அவளுக்கு என்ன - தாய்க்கே தன் பிள்ளையைப்பற்றிய கவலை இல்லாதபோது, கஞ்சிக்கே வழியில்லாத அந்த ஏழை என்ன செய்ய முடியும்? பசியால் வாடிச் சாகட்டும் என்றுதானே விடவேண்டி வரும்!

"எனக்குப் பால் கொடுத்து வந்தவள் மிக நல்லவள். என்னை ஈன்ற கல்நெஞ்சத் தாயைவிட எத்தனையோ பங்கு சிறந்த தாயென்றுதான் அவளைக் கூற வேண்டும். வறுமையிலும் கூட அவள் என்னை வளர்த்தாள். மற்றவர்கள் குப்பை கூளத்தை வீசி எறிவதைப்போல அவள் எங்காவது என்னை வீசி எறிந்திருக்க வேண்டும் - அவள் அப்படிச் செய்யவில்லை - கடமையை உணர்ந்தவள் அவள். ஏழையாயிருந்தும்கூட அவள் கடமையை நிறைவேற்ற என்னை வளர்த்தாள். அதனால் அவள் அடைந்த கஷ்டங்கள் எனக்கல்லவா தெரியும்?

"நான் ஒருவாறு வளர்ந்தேன் - விளக்கமில்லாத பழியோடு மானமற்றவனாக நான் வளர்ந்தேன். மற்ற என் சோட்டுச் சிறுவர்கள் என்னைப்பார்த்துக் 'கலப்படம்' என்றே அழைப்பார்கள். பாவம், அவர்களுக்கு என்ன தெரியும்! 'கலப்படம்' என்று சொல்லுவதில் அவர்களுக்கு ஒரு திருப்தி - களிப்புங்கூட. அவர்கள் வீட்டில் தாய்தந்தையர்கள் பேசிக் கொண்டதைக்கேட்டு அப்படியே என்னை அழைத்து வந்தார்கள். அவர்களுக்கு அந்தச் சொல்லின் பொருள் தெரிந்தால்தானே. எனக்குக் கூட அப்போது அந்தக் 'கலப்படம்' என்ற சொல்லின் நயம் தெரியாது. ஆயினும் அச்சொல் ஏனோ என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது.

"பள்ளிக்கூடத்தில், புத்திசாலிகளில் நான் முதல்வனாக இருந்தேன். நீதிபதியவர்களே! என் பெற்றோர்கள் இப்படி என்னைக் கைவிட்ட கொடுஞ் செயலைச் செய்யாதிருந்தால் நான் நாணயமுள்ள மனிதனாக— ஏன் ஒரு சிறந்த மனிதனாகக் கூட ஆகி இருப்பேன்.

"இந்த அடாத செயலை அவர்கள் செய்தார்கள். குற்றமற்ற நான் அவர்கள் செயலுக்கு இலக்கானேன் - நான் யாருமற்றவனாக இருந்தேன் -

அவர்கள் கவலையற்றவர்களாக இருந்தார்கள் - நான் பலர் நகைப்புக்கு ஆளாகி இருந்தேன். அவர்கள் இன்பம் துய்த்து நமக்கென்னவென்று இருந்தார்கள் - என்னை நேசிக்கவேண்டிய அவர்கள் என்னைக் கைவிட்டு வேறெதையோ யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

"நான் அவர்கட்குக் கடமைப் பட்டவன் - என் உயிர் அவர்களுடையது - அது அவர்களுக்குரியதுதான் - ஆனால் என் உயிர், இழிச் சொல்லுக்கு இலக்கான இந்த உயிர் ஒரு சோகச் சித்திரம்.

"ஈவு இரக்கமின்றி அவர்கள் என்னைக் கைவிட்டார்கள் - அவர்கள் எனக்காகச் செய்தது மனிதத்தன்மையற்றது - மிகத் தாழ்மையானது - கொடுமையானது - ஒருயிரினிடம் செய்யக் கூடாத அளவு இழிவானது"

"பிறர் தன்னைக் கண்டபடி பேசக் கேட்டவன் பேசியவனைப் புடைக்கிறான் — திருடப்பட்டவன் போலீஸ் உதவிகொண்டு தன் பொருளைத் திரும்பப்பெறுகிறான் — ஏமாற்றப்பட்டவன் ஏமாற்றியவனைக் கொல்கிறான் - துன்புறுத்தப்பட்டவன் — துன்புறுத்தியவனைத் தொலைக்கிறான் - அடிபட்டவன் அடித்தவனை அடிக்கிறான் - பழிவாங்கப்பட்டவன் வாங்கியவனைப் பழிக்குப் பழி வாங்குகிறான் - மானமிழந்தவன் போக்கியவனை வதைக்கிறான் - இவை உலக இயல்பு.

"காலத்திற்கும் நிலைத்து நிற்கும் கடும் பழியை, மாசை, மானமற்ற வாழ்வை அடைந்தவன் நான். நான் இவர்களைக் கொலை செய்ததில் என்ன ஐயா தவறு? நான் வஞ்சம் தீர்த்துக் கொண்டேன் - அது எனக்குரிய உரிமை - மனித சட்டமுங்கூட - எனக்குத் தந்த இந்தக் கொடுமையான வாழ்வுக்குப் பதிலாக அவர்களின் இன்ப வாழ்வைப் பறித்தேன் — அவ்வளவுதான்.

"நீங்கள் என்னைப் பெற்றோரைக் கொலை செய்தவன் என்று கூறலாம். இவர்கள் என் பெற்றோர்களா? நீங்களே கூறுங்கள். இவர்கள் இன்ப வாழ்விற்கு நான் ஒரு பயங்கரப் பிறவி என்று எண்ணி என்னைக் கைவிட்ட இவர்கள் என் பெற்றோர்களாக இருக்க முடியுமா? சமூகத்திற்குப் பயந்து அக்கம் பக்கம் அது இது சொல்லுமே என்று பயந்து பெற்ற பிள்ளையை, காதற் கனியைக் கைவிட்ட இவர்களா என் பெற்றோர்கள்? நான் உயிரோடு வாழ்வதே இவர்களுக்குப் பயங்கரமானது - வெட்கக் கேடானது என்று கைவிட்ட இவர்களா என் பெற்றோர்கள்? நீங்களே கூறுங்கள்! இவர்களா என் பெற்றோர்கள்?

"நீதிபதியவர்களே! அவர்கள் இன்ப வாழ்வைக் கருதினார்களே ஒழிய என் துன்ப நிலையைத் துளியும் நினைக்கவில்லை. அவர்கள் பிள்ளை நான் என்பதையே அழித்துவிட்டார்கள்.

"நானும் என் பங்கை அவர்களுக்குச் செலுத்தவேண்டிய கட்டம வந்தது, செலுத்தி விட்டேன்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மனிதர் — என் தந்தை ஆம் — தந்தையென்று எனக்கு அப்பொழுது தெரியாது - என் வீட்டிற்கு முதல் தடவையாக வந்தார். இரண்டு மரச்சாமான்கள் செய்யவேண்டுமென்றார். எங்கள் ஊர்ப் பாதிரி மூலம் இவரே என் தந்தை என்ற பிறகே நான் தெரிந்து கொண்டேன். ஊரிலே நடக்கின்ற ஒழுக்கக் கேடுகளெல்லாம் பாதிரிகளுக்குத் தெரியும். பரமண்டலத்திலுள்ள பரமபிதாவிடம் இந்தப் பாவ பிண்டங்களுக்கு மன்னிப்பு வாங்கித்தரும் தாகர்களல்லவா பாதிரிமார்கள்! அவரே இவரைப் பற்றி விளக்கம் கூறினர். யாரிடமும் நான் இதை வெளியிடக் கூடாதென்ற உறுதியைப் பெற்றுக்கொண்டார்.

"நான் அவரைத் தெரிந்து கொண்டேனென்பது அவருக்குத் தெரியாது. அவர் அடிக்கடி வருவார், பல சாமான்கள் செய்யச் சொல்லுவார். நல்ல கூலி கொடுப்பார். எதை எதையோ பற்றிப் பேசுவோம். என்னை அறியாமலே அவர்மீது எனக்கு அன்பு வளர்ந்து வந்தது-

"இவ்வாண்டுத் தொடக்கத்தில் அவர் மனைவியை அழைத்துக்கொண்டு வந்தார். அந்த அம்மாள் — என் தாய். அப்பொழுது அவர்கள் என் தாய் என்பது எனக்குத் தெரியாது வீட்டில் நுழையும்போது ஊளிர் சுரம் வந்தவர்களைப்போலத் தோன்றினர்கள். 'என்ன அம்மா உடம்பிற்கு?' என்று நான் கேட்டேன். நாக்குளறிக் கொண்டே 'ஒன்றுமில்லை' என்றார்கள். நரம்புநோயால் பீடிக்கப் பட்டவர்கள் போலும் என்று நான் நினைத்ததுண்டு. அந்த அம்மாள் உட்கார வேண்டுமென்றார்கள். இருக்கை கொடுத்தேன். குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றார்கள். குடிநீர் கொடுத்தேன். அவ்வளவுதான். அந்த அம்மாள் வாயைத் திறக்கவே இல்லை. முகம் வெளுத்துப்போய் இருந்தது. என்னையும் என்னல் ஆக்கப் பட்ட பொருள்களையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். என் தந்தை கேட்டதற்கெல்லாம் ஏதோ தாறுமாறாக உண்டு இல்லை என்று உளறிக்கொண்டிருந்தார்களே ஒழிய எதையும் விளக்கமாக அந்த அம்மாள் பேசவில்லை. அந்த அம்மாளுக்குச் சிறிது பைத்தியம் என்றுகூட நான் அப்பொழுது நினைத்ததுண்டு.

"மறுமாதம் அந்த அம்மாளும் அவரும் வந்தார்கள். அமைதி அந்த அம்மாள் முகத்தில் நிலவியது. ஏதோ முடிவிற்கு வந்திருக்கிறார்கள் அந்த அம்மாள் என்பதை அவர்கள் பேச்சு விளக்கிக் கொண்டிருந்தது.

"நீண்ட நேரம் அந்த அம்மாள் என்னிடம் பேசிக்கொண்

டிருந்தார்கள். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்தது எனக்குப் பெரிய மகிழ்ச்சியாக இருந்தது. அந்தச் சீமாட்டியும் என்னிடம் பேசுவதால் ஏதோ பெரிய இன்பத்தை அடைகிறார்கள் என்பதை அந்த அம்மாளின் முகம் அவர்களையும் மீறி விளக்கிக்கொண்டிருந்தது. ஒரு பெருந்தொகையை என்னிடம் கொடுத்துச் சில சாமான்கள் செய்யும்படி கட்டளையிட்டுச் சென்றார்கள்.

"இப்படிப் பலதடவை என் வீட்டிற்கு வருவதும், ஏதாவது பேசுவதும் வேலை கொடுப்பதுமாக இருந்தார்கள். இந்தத் தடவை என்மீது அதிக அக்கரை காட்டினார்கள் அந்த அம்மாள். என்னைப் பற்றியெல்லாம் உருக்கமாகக் கேட்டார்கள். அவர்களைப்பற்றி அப்பொழுது நான் ஒன்றும் அறியாதவனாகவே இருந்தேன். அந்த அம்மாள் என் வாழ்க்கை, இளமைக் காலம், பெற்றோர்களைப் பற்றியெல்லாம் கேட்டார்கள்.

"கூண்டை உடைத்துக் கொண்டு புலி பாய்வதைப் போல, அணையை உடைத்துக் கொண்ட ஆற்றுப் பெருக்கைப் போல, இதுவரையில் என் உள்ளத்தில் கட்டுண்டு கிடந்த என் பெற்றோரின் செயல்— பேயுருவெடுத்தது. என் பெற்றோரைப் பற்றியா அம்மா கேட்கிறீர்கள்? 'அவர்கள் என்னைக் கைவிட்ட கயவர்கள், கொடியவர்கள். அவர்கள் பேச்சே வேண்டாமம்மா' என்று வெறுப்பாகவும் கோபமாகவும் சொன்னேன்.

"தன் கையை இதயத்தில் ஊன்றித் தள்ளாடி அப்படியே சாய்ந்துவிட்டார்கள் அந்த அம்மாள். அவர்கள் மீண்டும் உணர்வு பெற்றுப் பழைய நிலையை அடைய நீண்டநேரம் ஆனது.

"இந்த அம்மாளின் விபரீத போக்கைக் கவனித்தபோது 'இவளே என் தாய்' என்ற முடிவுக்கு வந்தேன். ஆயினும் நான் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை.

"நான் வேறு வகையிலே மறைவாக இவர்கள் இருவரையும் பற்றி விசாரித்து வந்தேன்.

"இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புதான் இந்த அம்மாள் இவரை மறுமணம் செய்துகொண்டார்களாம். இதற்கு முன் மூன்று ஆண்டுகள் விதவையாக இருந்தார்களாம். முதல் மணாளனுடன் வாழ்க்கைப் படுவதற்கு முன்பு வேறு யாருடனோ இவர்கள் நட்பாக இருந்தார்களாம். ஆனால் அந்த நட்புக்கு அத்தாட்சி கிடையாது.

"நான் அதற்கு அத்தாட்சி. முதலில் என்னை மறைத்துப் பிறகு அழித்துவிடத் திட்டமிட்டிருந்தார்கள் இவர்கள்.

"எதையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாது பொறுமையாகவே இருந்தேன் நான்.

"ஒருநாள் மாலை அவர்கள் இருவரும் என் வீட்டிற்கு வந்தார்கள். அன்று ஏனோ அந்த

அம்மாள் வேற்றுருப்பட்டிருந்தாள். அவள் வீட்டிற்குத் திரும்பிப் போகும் போது 'உன்னைப் பார்த்தால் நல்லவனாக நாணயமுள்ளவனாகத் தோன்றுகிறது. நீ எப்பொழுது திருமணம் செய்துகொள்ளப் போகிறாய்? உன் இஷ்டமான பெண்ணைப் பார்த்து நீ திருமணம் செய்துகொள், நான் உனக்கு உதவி செய்கிறேன். நான் எதற்காக இதைக் கூறுகிறேனென்றால் மனமில்லா மணாளனோடு நான் முதலில் வாழ்க்கைப் பட்டேன் என் வாழ்வு வறண்ட பாலையாக இருந்தது. நான் மிகவும் உள்ளம் நொந்து உருக்குலைந்திருந்தேன். நீ அப்படி ஆகக் கூடாது. என்னிடம் பொருள் நிறைய இருக்கிறது. பிள்ளை கிடையாது. இந்தா இது உன் திருமணத்திற்காக நான் கொடுக்கும் தொகை' என்று ஒரு பணப் பையைக் கொடுத்தாள் அந்த அம்மாள்.

"நான் அந்த அம்மாளை ஏற இறங்கப் பார்த்தேன். 'நீ என் தாய்!' என்றேன்.

"அந்த அம்மாளுக்கு நடுக்கம் கண்டுவிட்டது. பின்புறமாகத் தள்ளாடி தள்ளாடி மூன்று அடி எடுத்து வைத்து என்னைப் பார்க்க விரும்பாதவள் போலக் கண்ணை மூடிக்கொண்டாள்.

"'அவர்-என் தந்தை-என் கைகளால் அந்த அம்மாளைத் தாங்கிக்கொண்டு 'சீ-நீயொரு பைத்தியம்' என்று கத்தினார் என்னைப் பார்த்து.

"நானா பைத்தியம்? ஒருபோதும் இல்லை. நீங்கள் யார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நீங்களே என் பெற்றோர்கள். உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள்— இதை நான் யாரிடமும் கூறமாட்டேன். இதனால் நான் உங்களுக்கு எந்தக் கேடும் நினைக்க மாட்டேன். இன்று இருப்பதைப் போல என்றும் தச்சனாகவே இருப்பேன்' என்று கூறினேன்.

"அவர் அழுதுகொண்டிருக்கும் என் தாயைத் தாங்கிக் கொண்டே வெளியே போகப் புறப்பட்டார்.

"நான் விரைந்து சென்று கதவைத் தாழிட்டு வழி மறைத்துக் கொண்டு 'இன்னுமா அந்த அம்மாள் என் தாய் என்பதை மறைக்கப் பார்க்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

"அவர் விழிகள் சோவைப் பழம் போலச் சிவந்தன. முகம் வெளுத்துவிட்டது. இதுவரையில் மறைந்திருந்த இரகசியம் தங்கள் பெயரை, மதிப்பை, நிலைமையை, வாழ்வைப் பாழ்படுத்தும் என் பிறப்பு வெளிப்பட்டு விட்டது என்ற பயத்தால் கோபத்தோடு 'இவன் ஒரு அயோக்கியன், மடையன், நம்மிடத்திலிருந்து பணத்தைப் பறிக்கப் பார்க்கிறான். இவனுக்கு உதவி செய்வதை விட ஏழைகளுக்கு உதவி செய்' என்று கடுகடுத்து என் தாயிடம் கூறினர்.

"என் வார்த்தைகளைக் கேட்டுக் குழம்பிப் போன என் தாய் 'போவோம்' 'போவோம்' என்று

என் தந்தையைத் தரிதப்படுத்தினுளே ஒழிய வேறென்றும் அவளால் பேச முடியவில்லே.

"கதவு மூடியே இருந்தது— நான் முன்போலவே நின்று கொண்டிருந்தேன்.'

"கதவைத் திறக்கிருயா 'கொள்ளே கொள்ளே' என்று கூக்குரலிடட்டுமா" என்று கத்தினுர் என் தந்தை.

"கதவைத திறந்துவிட்டேன். விரைந்து சென்றுவிட்டார்கள். இவன் நம்மைத் தெரிந்துகொண்டான். இனி நாம் மானத்தோடு வாழ முடியாது. நம்முடைய செல்வமும் சிறப்பும் நம்முடைய ஒழுக்கக் கேடும் இனிச் சிரிப்பாகச் சிரிக்கப்போகிறது என்று எண்ணிக்கொண்டே நடந்திருப்பார்கள் என் பெற்ருேர்கள்.

"எனக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தது. பெற்ருேர்களே என்னே ஏற்றுக்கொள்ள மறுக்கிருர்கள்—என்னேக் கைவிட்டுவிட்டார்கள்—சமூகத்திற்குப் பயந்து என்னேச் சவக் குழியில் தள்ளிவிட்டார்கள் என்று நினேக்கும்போது வெறுப்பும் பகை கலந்த கோபமும் உச்ச நிலேயை அடைந்தன. நான் ஆவேசம் அடைந்தவன்போல் ஆனேன். அவர்களேப் பின்தொடர்ந்து ஓடினேன்.

"எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. எதிரில் வருவோர் யாரென்று அறிய முடியாத இருள். சந்தடி இன்றி என்னே அவர்கள் அறிந்துகொள்ள இயலாத அளவில் நான் அவர்களேப் பின்தொடர்ந்தேன்—என் தாய் அழுதுகொண்டே போனுள்.

"அது உன் தவறு—அவனேப் போய்ப் பார்க்கவேண்டுமென்று ஒரே பிடிவாதமாக இருந்தாயே! நம் நிலேமைக்கும் அந்தஸ்திற்கும் நாம் அவனேச் சென்று பார்த்திருக்கக் கூடாது. நாம் அவனே நெருங்காமலே அவனுக்கு வேண்டிய உதவி செய்திருந்தால் இந்தத் தொல்லேகள் வந்திருக்காதே' என்று என் தாயைச் சமாதானப்படுத்திக் கொண்டே சென்ருர் என் தந்தை.

"நான் அவர்கள் முன் பாய்ந்து வந்தேன். 'பார்த்தீர்களா, நீங்களே என் பெற்ருேர்கள்! என் உண்மையை மறைக்கிறீர்கள்? முன்னமே என்னேக் கைவிட்டீர்கள். இன்றுமா என்னே ஏற்றுக்கொள்ளமறுக்கிறீர்கள்? அப்பா!- அம்மா! என்று கதறினேன். 'மகனே என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள், வேறு எதுவும் எனக்கு வேண்டாம். உங்கள் நிலேயை மதிப்பைக் கெடுக்கமாட்டேன். எனக்கு உங்கள்மேல் ஏற்பட்டுள்ள பாசத்தின்மேல் ஆணேயாகக் கூறுகிறேன். நான் யாரிடமும் என் பிறப்பைக் கூறமாட்டேன். நான் எப்பொழுதும் இருந்ததைப்போல் தச்சனுகவே இருக்கிறேன். ஒரே ஒரு வார்த்தைசொல்லுங்கள் மகனே என்று. அது போதும் எனக்கு' என்று அவர்கள் காலேப் பிடித்துக்கொண்டு அழுதேன்; கெஞ்சினேன்.

"அறமன்றத் தலைவர் அவர்களே! நடந்தது என்ன தெரியுமா? இரக்கங்காட்டவேண்டிய என் தந்தை நீதியின்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன், மகனே என்று மார்போடு தழுவவேண்டிய என் தந்தை தன் சட்டைப் பையில் இருந்த சுழல் துப்பாக்கியை எடுத்து என்னைச் சுட முனைந்தார்.

"தற்காப்பிற்காக நான் அவர் கையைப் பிடித்தேன். அவர் என்னைச் சுட்டார்; குறி தவறிவிட்டது.

"கோபம் அதன் எல்லையைத் தாண்டிவிட்டது. என்னிடம் இருந்த தச்சுளியால் அவரைக் குத்தினேன். என் ஆத்திரம் அடங்கும் வரையில் குத்தியிருக்கிறேன்போல் தோன்றுகிறது.

"என் தாய் என் தலைமயிரைப் பிடித்துக் குலுக்கினாள். 'கொலை! கொலை! உதவிக்கு வாருங்கள்' என்று கத்தினாள்."

"நான் அவளைக்கூடக் கொன்றதாக நினைவிருக்கிறது. அந்த நேரம் நான் என்ன செய்தேன் என்பது எனக்குத் தெரியுமா? அவர்கள் இருவரையும் தரையில் பிணமாகக் கண்டபோதுதான் நான் செய்தது கொலை என்று எனக்குப் புரிந்தது."

"காரியம் மிஞ்சிவிட்டது. இனி என்ன செய்வது—வேறெதையும் யோசிக்க நேரமில்லை. இரு பிணங்களையும் அருகில் ஓடிக்கொண்டிருந்த சேன் நதியில் வீசிவிட்டேன். அவ்வளவுதான். நீங்கள் இனி எனக்குத் தீர்ப்புக் கூறலாம்" என்றான் கைதி

உள்ளத்தில் இருந்ததையெல்லாம் கொட்டிய பிறகுதான் அவன் முகம் சற்றுத் தெளிவடைந்தது.

"இன்றைய எட்டாம் நாள் தீர்ப்புக் கூறப்படும்" என்றார் நீதிபதி.

நீங்கள் எல்லாம் தீர்ப்புக் கூறுகின்ற நீதிபதிகளாக இருந்தால் இந்தக் கொலைகாரனுக்கு என்ன தீர்ப்புக் கூறுவீர்கள்? சற்று தயவு செய்து கூறுங்கள் பார்ப்போம்.

[பிரெஞ்சுக் கதையின் தமிழாக்கம்]

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNI ACHAKAM, 16, Soui Amman Koil Street, Tondiarpet, Madras—12.